உ

மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

தொகுதி 2.] 1923வரு நவம்பர்மீ 1உ [பகுதி 10.

இதில் வெளிவரும் "பவளத்தீவு" அல்லது
"துடும்பசாபம்" என்னும் நாவல்

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

17 DEC 19

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது

1923

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெரும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றனர்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடங் [illegible] வேண்டியதா யிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதா யிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922ஹு பிப்ரவரிμ 1௨ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொ[illegible] பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்[illegible]ரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேகம் நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ஹு மார்ச்சுμ 1௨ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவழத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணாவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் [illegible]க்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

மானேஜர்: "ஆனந்த நிலயம்"

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்.

நீர். நீர் பேசும் பாஷையால் நீர் நவீன புரிவாசி யென்றே தெரிகின்றது. நாம் இன்னும் ஆறுவாரங்களில் நமது தாய் நாடு சேருவோம்'' என்றார்கள்.

கிழவன் உடனே எழுந்து முழங்காற்படி யிட்டு "ஓ! பரமதயாநிதியாகிய பெருமானே. தங்களை யன்றி வேறு யாரால்தான் என்னை யிவ்வாறு மிக்க அதிசயமான விதமாகக் காப்பாற்றி என் தாய்நாட்டுக் கப்பலொன்றிலேயே கொண்டுவந்து சேர்க்க முடியும். இத்தகைய கருணைக்குப் புழுவினுங்கடையாய நாயேன் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். தங்கள் கருணை யிவ்வாறே யென்னை யின்னும் என் தாய் நாட்டில் மட்டுமல்ல, என் மூதாதைகளின் வாசஸ்தலத்திற்கே நேராய்க் கொண்டு போய் விடுமென்றே நம்புகிறேன். ஓ கருணைக்கடலே, என்உயிர்க்குயிரே........'' என்று நெடுநேரம் பிரார்த்தனைசெய்துகொண் டிருந்தான்.

* * * * * *

நவீனபுரி இராஜ்ஜியத்திற்குச் சுமார் இருநூறுமைல் தூரத்தில் விக்னபுரி என்ற ஒரு நகரமிருக்கிறது. அது புவனகிரி இராஜ்ஜியத்தின் இராஜதானி நகரம். நவீனபுரியை விட் டோடிவந்துவிட்ட இராணியும் தேவசிங்கம் இராஜ குமாரனும் அவன் தாயும் இந் நகரில்தான் வந்திருக்கிறார்கள். ஏனெனில் ஜகத்குரு அங்குதானிருக்கிறார். அங்கு வந்ததும் இராணியும் தேவசிங்கம் இராஜகுமாரனும் மணம் புரிந்துகொண்டார்கள். தேவசிங்கன் மிக்க செல்வவந்தனென்று நாம முன்னமே கூறியிருக்கிறோம். பணத்தாலாகாதது என்ன விருக்கிறது? அந்தத் தைரியத்தால் ஜகத் குருவின் உதவியைப் பெற்றுக்கொண்டால் காரிய சித்தி பெறலாமென்று துணிந்து அங்கு சென்றார்கள். ஜகத்குரு தான் உலக விஷயத்தில் விரக்தியுடைய

சென்னை-600 005
186495

வரா யிருந்தாலும் அவரிடம் மந்திரிகளைப் போலிருக்கும மற்ற குருமார்களும் அந்த நகரத்தில் செல்வாக்குடைய வர்களுங் கூடவா பண ஆசை யில்லாதவர்களாக விருக் கிறார்கள்? இவர்கள் அங்கு போய்ச் சேர்ந்து ஒரு மாத மாயிற்று. அதற்குள் தேவசிங்கன் தன் பணத்தைத் தாராளமாய்ச் செலவுசெய்து ஜகத்குருவின் அருகிலுள்ள குருமார்கள், நகர ஜனங்களில் முக்கிய மானவர்கள், யாவரையும் வசப்படுத்திக் கொண்டான்.

இவர்கள் அங்கு சேர்ந்த ஒரு மாதம் கழித்து ஒரு நாள் காலை சுமார் பத்து மணிக்கு ஜகத்குருவின் ஆசார மண்டபத்தில் அந்த நகரத்திலிருந்த பிரபுக்கள், பிரமு கர்கள், செல்வச்சீமான்கள் முதலிய அனைவர்களும் பிர காசம் பொருந்திய விலையுயர்ந்த உடைகளை யணிந்து கொண்டு குழுமியிருந்தார்கள். அவ்வீதி நிறைய நகர ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். ஜகத்குருவின் போர் வீரர்கள் எங்கும் காவல் நின்றார்கள். அவருடைய பரி வாரங்களாகிய குருமார்கள் அவர் சிம்மாதனத்தைச் சூழ்ந்து பின்னும் இருபுறங்களிலும் அமர்ந்திருந் தார்கள்.

மணி பத்தடிக்கும் சமயத்தில் நவீனபுரி இராணியும் தேவசிங்கனும், அவன் தாயாரும் மண்டபத்தினுள் நுழைந்தார்கள். இவர்களைக் கண்ட ஜனங்களனைவரும் ஆரவாரித்தார்கள். மூவரும் உள்ளே சென்றதும் ஜகத் குருவின் பாதத்தில் வணங்கினார்கள். குரு அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தபின் அவர்கள் தங்களுக்கென்று விடப்பட்ட விடுதிகளில் அமர்ந்தார்கள். அதன் பிறகு ஜகத்குரு இராணியை நோக்கி,

"மகாராணியே! நாம் உண்மையான மனவருத்தத் தோடு உன்னை இச்சபையின் முன் அழைத்த காரண

மென்னவெனில், உன் கணவனும் என் பிரதி நிதியால் முடி சூட்டப்பட்ட அரசனுமாகிய அமரநாதன் என்ற இராஜ குமாரனுடைய மரணத்தைப்பற்றிய விவரத்தை நீ கூறவேண்டு மென்பதற்காகவே” என்றார்.

நேயர்களே! ஜகத்குரு கூறியதற்கு விடையாக தான் நிரபராதியென்று யாவரும் நம்பும்படியாகச் செய்வதற்காக இராணி மிக்க சாதுர்யமாகப் பேசிய யாவற்றையும் விவரமாய்க் கூறின் மிக்க விரியுமென்றஞ்சிச் சுருக்கமாகக் கருத்தை மட்டும் ஈண்டு மொழிகின்றோம்.

“சங்கைக்குரிய பரமாசாரியராகிய ஜகத்குரு சுவாமிகளே! நான் ஆண் பாலாயின் என் வாளைக் கையி லேந்தி என் நிரபராதத் தன்மையை ருசுப்படுத்துவேன். நானோ பெண்பால். அதிலும் இளவயதுடையவள். நான் நிரபராதி யென்ற என் மன உறுதி எனக்கு இல்லாவிட்டால் நான் இங்கு நின்று பேசமுடியாது. சுவாமிகளே! நான் என் புருடன் கொலைக்கு உடைந்தையாயிருந்தேனென்று என் விரோதிகள் என்மேல் அபாண்டம் கூறியிருக்கிறார்கள். அப்படிக் கூறிய முதல் ஆசாமி என்னை மணம் புரிந்து கொண்டு என் பட்டத்தை யபகரித்துக் கொள்ள வேண்டுமென்று முயற்சி செய்தவன். அவன் துஷ்டகேது இராஜகுமாரனே. சுவாமிகளே! அவன் எப்படிப் பட்டவன்? அவனைப் பற்றி எத்தகைய அகோரமான சங்கதிகள் சமீபத்தில் கேள்விப்பட்டோம். கடவுளே அவனுடைய அநீதச் செயல்களுக்குத் தக்க தண்டனை யவனுக்கு விதித்து விட்டார். அவன் தாயைக் கொன்றவன் என்று ருசவு செய்யப்பட்டு மரண தண்டனை யடைந்திருக்கிறான். அத்தகைய சண்டாளன் கூறியதை நம்பி நான் குற்றம் சாட்டப்பட் டிருக்கிறேன். சுவாமிகளே! என் கணவர் கொலை செய்யப்பட்டார்

என்பதே பெரிய அபாண்டம். அங்கு நடந்த விசாரணை யில் அது கொலையென்று ருசுசெய்யப் பட்டதாகக் கூறக் கூடும். ஆனால் அது எத்தகையோர் சாக்ஷியத்தால் ருசுசெய்யப் பட்டதாகக் கருதப்படுகிறது? கொலைத் தொழிலுடையவனுடை புத்திரனாகிய சிறுபையன் வாக் கியங்களாலும், புத்தி சுயாதீன மற்றுக் காரணமின்றித் தன் உயிருக்கே நடுங்கிக்கொண் டிருந்த காரியதரிசியா கிய கிழவன் வார்த்தைகளாலுமே.

சுவாமி! என் கணவன் கொல்லப் பட்டதாகவே ருசுவானதாக ஒப்புக் கொண்டாலும், என் வரையில் நான் அதிற் சேர்ந்தவளாக என்மேல் குற்றம் சாட்டப் படவில்லை. சுவாமிகளுக்கு இன்னொரு விஷயத்தைப் பற்றிக் கூறவேண்டியது என் கடமையாக விருக்கிறது. அதாவது, நான் நிரபராதி என்பதை ருசுப்படுத்துவதற் காக நமது தேச வழக்கப்படி எனக்காக ஏற்பட்ட ஒரு வீரன் பகிரங்க யுத்தத்திற்கு நின்றான். என்மேல் குற்றம் சுமத்த முன் வந்து அந்த வீரனோடு யுத்தத்திற்கு நின்ற வர்கள் துஷ்டகேதுப் பிரபுவும், குமரசிங்கம் பிரபுவுமே. இந்த இருவரும் என் வீரனால் தோற்கடிக்கப் பட்டார் கள். சுவாமிகளே! இதனால் கடவுளே முன்னின்று என் நிரபராதத் தன்மையை ருசுப்படுத்தினார் என்று விளங்குகிறதன்றோ. இது மட்டுமல்ல. அவ்வாறு என் மேல் அபாண்டம் கூறிய அந்த இருவரும் சமீப காலத் தில் கொல்லப் பட்டார்கள் என்பதும் கடவுள் இரண் டாம் முறையாக என் நிரபராதத் தன்மையை ருசுப் படுத்தினார் என்று காட்டுகிறது.

கடவுளின் பிரதிநிதியாகிய சுவாமிகளே! நான் என் கணவனை நேசிக்கவில்லையென்று என்மேல் குறை கூற லாகும். சுவாமி! நான் தங்கள் சமூகத்தில் பொய்

கூறத்துணியேன். என் கணவன் மேல் எனக்கு விசுவாசம் இல்லையென்பது உண்மையே. சுவாமி! இத்தகைய உணர்ச்சி தங்களுக்கு அனுபவமானதல்ல. ஆதலால் தாங்கள் அதை உணரமாட்டீர்கள். அத்தகைய விஷயத்தைப்பற்றித் தங்கள் முன் நான் பேசுவதே குற்றமாகும். நானே இளவயதுடையவள். கடவுளாலுண்டாக்கப் பட்ட இந்த உணர்ச்சியை வெல்லும் சக்தி எனக்கில்லை. நான் வேறொரு வாலிபர் மேல் அன்பு வைத்திருக்கக் கூடியதும் சுபாவமே. ஆனால் அதனால் நான் என்கணவனுக்கு எள்ளளவு துன்பமேனும் செய்யக் கூடியவளல்ல. அய்யோ கடவுளே! அந்தக் கோரமான கொள்ளை நோயால் அவர் பீடிக்கப் பட்டுத் திடீலென்று சாளரத்தின் வழியாய்ப் பாய்ந்தபோது நான் அடைந்த சகிக்கொணு மனோவேதனையால் ஸ்மரணையற்றுச் சவம்போல் வீழ்ந்து விட்டேன். சுவாமி! தன் பிரியத்திற்கு நான் இணங்கவில்லையென்று என்மேல் கடுமையான வஞ்சம் தீர்த்துக்கொள்ள வெண்ணியே துஷ்டகேதுப் பிரபு எனக்கு இவ்வளவு துன்பத்தை விளைவித்தான்.

இப்போது நான் என் குடிகளை யன்னிய நாட்டுப் போர்வீரர்களிடம் விட்டு விட்டு, என் வீட்டையும் நாட்டையும் விட்டு நிராதரவான நிலைமையில், மிக்கமனத் துயருக்கு ஆளாகி இங்கு வந்திருக்கிறேன். சுவாமிகளிடம் நீதி கிடைக்கு மென்கிற நம்பிக்கை யெனக்கிருக்கிறது. இதற்கு மேல் நான் கூறத்தக்கது ஒன்றுமில்லை.'' என்று கூறிமுடித்தாள்.

இராணி, தான் கூறுவதெல்லாம் அடியோடு பொய்யே யென்று தன் மனதார அறிந்திருந்தாலும், உண்மையாகவே பூரண நிரபராதியைப் போல் மிக்க தந்திர

சாமார்த்தியமாகப் பேசினள். அதனல் சபையோரனை வரும் இரக்கத்தோடு ஆரவாரித்தார்கள். ஜகத்குரு மற்ற குருமார்களோடு இரண்டொரு வார்த்தைகள் பேசி விட்டு இராணியை நோக்கி,

"இராணியே! நாங்கள் ஒரு மனதாக நீ பூரண நிரபராதியேயென்று கருதுகிறேம். ஆகையால் இனி யாரேனும் உன்னைக் குற்றவாளியென்று கூறினல் அவர் கள் மதப்பிரஷ்டம் செய்யப்படுவார்கள். மகாராணியே! உன்னையும் உன் புருடராகிய அரசரையும் பூரணமாக ஆசீர்வதிக்கிறேம்" என்று கூறினர்.

இம்மொழிகளைக் கேட்டதே சபையோரனைவரும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள். முன்னமே தேவ சிங்கன் பணத்தைப் பெற்று இராணி ஜெயம்பெற்றல் இன்னும் பணம் கிடைக்குமென்று ஆவலோடு வீதியில் காத்துக்கொண்டிருந்த ஜனங்கள் இச்சங்கதியைக் கேட் டதே வீதியதிர்ந்துவிடுமாறு ஆரவாரம் செய்தார்கள்.

தாங்கள் எதிர்பார்த்ததை விட மிக்க திருப்தியான பூரண ஜெயமடைந்த இராணியும், அவள் கணவனும், அத்தையாரும் மிக்க ஆனந்தத்தோடு தாங்கள் தங்கி யிருக்கும் மாளிகைக்குத் திரும்பினர்கள். தேவசிங்கனு டைய பணம் ஜனங்களுக்குத் தாராளமாய் அள்ளியிறைக் கப் பட்டது.

50-வது அத்தியாயம்.

டாக்டர் தங்கவேலுப் பிள்ளை இராணியைச் சந்தித்தல்—கலகத்திற்கு ஆலோசனை—சத்தியவீரப் பிரபுவும் மாதவனும்—நாதமுனியின் நிலைமை—அவன் கோரிக்கைகள்—நாதமுனியின் மரணம்.

இராணி முதலியவர்கள் தங்கள் வாசஸ்தலம் சேர்ந்ததும், இராணி தன் மனச்சாட்சி செய்யும் கலக்கத்தைச் சாந்தப் படுத்துவதற்காகச் சற்று நேரம் தனியேயிருக்க வெண்ணித் தன் சயன அறைக்குப் புறப் பட்டாள். ஆனல் அச்சமயம் ஒரு வேலைக்காரன் வந்து "யாரோ ஒரு வயோதிகர் தங்களை யவசியம் காணவேண் டும் என்று முன் அறையில் காத்துக்கொண் டிருக்கிறார்" என்றான். இராணி உடனே நேராய்ச்சென்று அந்த அறைக்குள் பிரவேசித்ததும் டாக்டர் தங்கவேலுப்பிள்ளை அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டு வியப்பும் மிக்க சந் தோஷமு மடைந்தாள். தன் கணவன் வீரமும் தைரியமு முடையவனெனினும் தன் பயங்கரமான இரகசியம் அவ னுக்குத் தெரியாதபடியால் தனக்குத் தந்திரமும் வஞ் சகமுமான உபாயங்களைக் கூறக்கூடியவ னல்லவாதலின், இது காறும் தனக்கு அத்தகைய ஆலோசனைகளைக் கூறிக்கொண் டிருந்த டாக்டர் வருகைக்காக இராணி மிக்க சந்தோஷமடைந்தாள்.

டாக்டர் முழங்காற்படியிட்டு இராணிக்கு வந்தன மளித்தார். இராணி முகமலர்ச்சியோடு அவரை நல்வர வேற்று "ஆ! என் துர் அதிஷ்டகாலத்திலும் என்னை மறக்கவில்லை போல் காண்கிறது" என்றாள். டாக்டர் "மகாராணி! நான் தங்களைப்பற்றி சதா சிந்தித்துக்

கொண்டே இருந்தேன். தங்களுக்கு நேர்ந்த இடுக்கண் களைப்பற்றி கேள்வியுற்றபோது என்மன மடைந்த வேதனை கடவுளுக்கே தெரியும். மகாராணி! தங்கள் காலம் இவ்வாறே யிருந்து விடாது. சீக்கிரத்தில் பழைய படி நற்காலம் பிறக்கு மென்றே நம்புங்கள்.'' என்றார்.

இராணி:—ஆ! நீர் கூறுவதைப் பார்த்தால் எனக்கு நம்பிக்கை யுண்டாக்கும் சங்கதி கொண்டுவந்திருப் பது போல் தோன்றுகிறது. ஓ கடவுளே! நான் மறுபடி என் இராஜரீகத்தைப் பெறுவேன் என்று கருதலாகுமோ?

டாக்டர்:—''ஆகா! கொஞ்சம் தைரியமும் ஊக்கமு மிருந்தால் தடையின்றி பெறலாகும்.

இராணி:—''இது கஷ்டமின்றி நிறைவேறுகிற காரிய மல்ல வென்று அறிவேன். ஆனாலும் ஜனங்களு டைய நிலைமை எப்படி.....'' என்றதே,

டாக்டர் ''மகாராணி யவர்கள் சற்று பொறுமையா யிருந்தால் நான் எல்லா சங்கதியும் கூறுகிறேன். அப் போதுதான் தங்களுக்குத் தத்காலம் அங்குள்ள நிலைமை நன்ருய் விளங்கும். அவநாசி யுத்தம் நடந்து சரியாக ஒரு மாதமாகிறது. 'மாயசிங்கன் ஆலசியம் செய்யாமல் எல்லா ஏற்பாடுகளையும் செய்யத் தொடங்கினன். யுத்தம் நடந்த மறுநாளே துஷ்டகேதுவை, அவன் தன் தாயைக் கொலை செய்ததற்காகப் பிராணதண்டனை யனுபவிக்கும் படிச் செய்தான். நான் அமரநாதன் கொலையிற் சம்பந்தப் பட்டவனென்று என்னைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ஆயிரம் சவரன்கள் பரிசளிப்பதாக விளம்பரப் படுத் தினன். அங்கநாட் டதிபதியாகிய தன் அரசன் பெய ரால் நயனபுரி இராஜ்ஜியத்தைத் தான் கைப்பற்றிக் கொண்டதாகவும், தங்களைச் சிம்மாதனத்தினின்றும் நீக்கி

விட்டதாகவும் தன் அரசனுடைய பிரதி நிதியாக அரசாளத் தான் நியமிக்கப் பட்டிருப்பதாகவும் பகிரங்கமாக விளம்பரப் படுத்திவிட்டான். சைனியத்தின் சேனதிபதி பதவியைத் தானே வைத்துக் கொண்டான். கல்லூர் மாகாணத்திற்கு இராகவ வீரப் பிரபுவை இராஜப்பிரதிநிதி (கவர்னர்) யாகவும் அங்குள்ள சேனைக்குப் படைத் தலைவராகவும் நியமித்து விட்டான். தங்கள் அரண்மனையையே தனக்கு வாசஸ்தலமாக வைத்துக் கொண்டான்...'' என்றபோது,

இராணி ''நண்பரே! கொஞ்சம் பொறும். எனக்கு ஒரு விஷயம் மட்டும் சற்றும் விளங்காமல் பெரிய மர்மமாகவே தோன்றிக்கொண் டிருக்கிறது. அதாவது இராகவப்பிரபு அங்கநாட்டரசனிடம் எப்படி இத்தகைய உயர்பதவியைப் பெற்ருன் என்பதே. ஏனெனில் நான் அவன் மேல் அன்புவைத்திருந்த சங்கதி அந்த அரசனுக்குத் தெரிந்தே யிருக்க வேண்டும். அதனுல் இராகவப்பிரபு என் கணவனுக்கு விரோதியாகவே இருக்கவேண்டுமென்றும், இன்னும் அவனைக் கொலை செய்தவர்களோடு சேர்ந்திருக்க வேண்டு மென்றுமே அந்த அரசன் கருதியிருக்கவேண்டும். அப்படியிருக்க இவ்வாறு எப்படி நடந்ததென்பதே எனக்கு விளங்கவில்லை'' என்ருள்.

டாக்டர் :—மகாராணி மாயசிங்கனுக்கு அந்த அரசனிடம் மிக்க செல்வாக்கிருக்கிறது. அதனுல் அரசன் இராகவப் பிரபுவின் முந்திய விஷயங்களை யெல்லாம் மனதிற் கொள்ளாமல் மாயசிங்கன் பிரியம் போல் நடந்து கொள்கிருன்.

இராணி :—ஆனல் மாயசிங்கனுக்கு இராகவப் பிரபுவின் மேல் அத்தகைய அபிமானம் உண்டாவதற்கு என்ன காரண மிருக்கிறது? என் விஷயத்தை

நோக்க மாயசிங்கனும் அவன் மேல் வெறுப்பு தானே அடையவேண்டும்?

டாக்டர்:—"ஆ! அது விஷயத்தில் ஒரு பெரிய இரகசியம் இருக்கிறது. ஒரு வார்த்தையால் யாவும் விளங்கி விடும். அதாவது இராகவப்பிரபு மாயசிங்கனுடைய புத்திரன்" என்றான்.

இதைக் கேட்டதே இராணி திடுக்கிட்டு மிக்க வியப்பும் பிரமையுமடைந்தாள். தன் விஷயத்திலும் இராகவன் விஷயத்திலும் மாயசிங்கன் இதுகாறும் நடந்துகொண்ட மாதிரியில் தனக்குப் பெரிய மர்மமாக விருந்த அனைத்தும் இப்போது பட்டப் பகற்போல் தெளிவாய் விளங்கி விட்டன.

டாக்டர்:—"ஆம். மாயசிங்கன், முன்பு என் தமையன் டாக்டர் தேவராஜனைப் பிள்ளையைக் கொலை செய்ததற்காகச் சிறையாக்கப்பட்டு ஓடிவிட்ட வலைஞனாகிய இலட்சுமணனே யாகும். கிடக்கட்டும், அதைப் இப்போது அவசியமில்லை" என்றார்.

இராணி "ஆ! தாங்கள் கூறிக்கொண்டிருந்த சங்கதியைப் பூரணமாகக் கூறி முடியுங்கள்" என்றாள்.

டாக்டர், "ஆம் கூறுகிறேன். இராகவப் பிரபு கல்லூர் மாகாணத்திற்கு அதிகாரியாகவும் சேனைத்தலைவனாகவும், நியமிக்கப்பட்ட சங்கதி அவநாசி யுத்தத்திற்கு மறு நாளே பகிரங்கப் படுத்தப்பட்டது. அச்சமயம் ஆத்மநாதம் பிரபுவும் அவர் புத்திரனும் இராஜதானி நகரில் இருந்தார்கள். அச்சங்கதியைக் கேட்டதே என் க்ஷேமத்தைப்பற்றி ஏற்பாடு செய்வதற்காக துரிதமாய்க் கல்லூர் மாகாணத்திலுள்ள தங்கள் நாட்டு மாளிகைக்கு வந்தார்கள். மகாராணி! ஆத்மநாதம் பிரபுவின் புத்திரன்

நான் வளர்த்துக்கொண் டிருந்த சிறுவனே" என்றார். இராணி "ஆ! வில்வநாதன் என்ற அந்த அழகிற் சிறந்த வாலிபன். அதைப்பற்றிச் சில நாட்களுக்கு முன்புதான் நான் கேள்விப்பட்டேன்" என்றாள்.

டாக்டர்:—ஆத்மவிலாசம் என்ற அந்த மாளிகை முன்னமே பாதுகாப்பான நிலைமையில் வைக்கப்பட்டிருந்தது. பிரபுவும் அவர் புத்திரனும் அங்கு வந்ததும், இரகசியமாக என்னை ஒரு கப்பலிலேற்றிப் பாஞ்சால நாட்டிற் கனுப்பிவிட வேண்டுமென்று ஆலோசனை செய்தார்கள். ஆனால் நான் இன்னும் கொஞ்ச நாட்கள் அங்கேயே யிருந்து நகரத்தின் நிலைமையை அறிந்துகொண்டு தாங்கள் எங்கிருந்தாலும் அங்கு வருவதென்று தீர்மானித்துக்கொண்டேன். இரண்டு வாரங்கள் கழிந்தபின் இராகவப் பிரபு சேனையோடு கல்லூர் மாகாணத்தில் பிரவேசித்து விட்டதாகச் சங்கதி வந்தது. நான் உடனே மாறுவேட மணிந்துகொண்டு நவீனபுரிக்குப் புறப்பட்டேன். பிரபுவும் அவர் குடும்பமும் தடை செய்ததைப் பொருட் படுத்தாமல் ஒரு சன்னியாசி வேடந் தரித்துச் சென்றேன். மாயசிங்கன் பூரண ஜெயமடைந்தாலும் ஜனங்களைச் சற்றேனும் கொடுமையாய் நடத்தாமல் எல்லோரோடும் நீதியாகவும் அன்போடுமே நடந்துகொள்ளுகிறான். ஆகையால் யாவரும் திருப்தியாகவே யிருக்கிறார்கள். ஆனால் பிரபுக்களும் செல்வவந்தர்களும் மட்டும் தங்கள் இராணியே மறுபடி வந்து அரசாள வேண்டுமென்ற பூரண எண்ண முடையவர்களாக விருக்கிறார்கள். சாதாரண ஜனங்களிலும் செல்வவந்தர்க ளனைவரும் அவ்வாறே யிருக்கிறார்கள்......" என்றதே,

இராணி "ஆ! இதுமட்டும் உண்மையாகவே யிருந்தால்......" என்றாள். டாக்டர் கோபமடைந்தவன்போல் "மகாராணி! நான் எப்போதேனும் இத்தகைய விஷயங்களில் பொய் கூறியதுண்டோ?" என்றான். இராணி "நண்பரே! கோபிக்கவேண்டாம். இந்த நல்ல சமாசாரம், 'நமக்கு இவ்வளவு நற்காலமுமுண்டோ! இது மெய்யோ கனவோ' என்று எனக்கு ஐயத்தை யுண்டாக்கிவிட்டது" என்றாள்.

டாக்டர்.-"யாவும் உண்மையே. நான் இராஜதானி நகரில் தங்கியிருந்த மூன்றுநாட்களில் உண்மையை யறிந்து கொண்டேன். பிரபுக்களும் செல்வவந்தர்களும் தங்கள் பட்சத்தில் சேர்ந்துகொண்டு தங்களுக்குதவி செய்ய ஆயத்தமா யிருக்கிறார்கள். கொஞ்சம் பணத்தைச் செலவு செய்தால் பாமர ஜனங்களனைவரும் தட்சணம் கிளம்பிவிடுவார்கள். இந்த உண்மையை யறிந்தபின்பே நான் ஆலசியமின்றித் தங்களிடம் வரவேண்டுமென்று புறப்பட்டேன். இங்கு வந்து சேர்ந்ததே சந்தோஷ சங்கதியைக் கேள்விப்பட்டேன். இதுவே நாம் வந்த காரியம் அனுகூலமாகவே முடியும் என்பதற்கு நற்சகுனமாக என் கருத்திற்குப் புலப்பட்டது" என்றான்.

இராணி :—"நண்பரே! கடவுள் தயவால் நான் மறுபடி என் சிம்மாதனத்தில் உட்கார்ந்தால் என் முதல் வேலை என் கையொப்பமும் அரசாங்க முத்திரையும் வைத்த ஒரு காலிப்பத்திரத்தைத் தம்மிடம் அளிப்பதேயாகும். அதில் தங்களுக்கு வேண்டிய பட்டம் பூஸ்திதி பொருள் யாவற்றையும் தாங்களே எழுதிக் கொள்ளுங்கள்" என்றாள்.

டாக்டர் :—"மகாராணி! தாங்கள் தங்கள் இராச்சி

யத்தை மறுபடி பெற்றுச் சந்தோஷ மடைந்தால் அதுவே எனக்குப் போதுமான பரிசாகும். இப்போது நம்பிக்கையாக என்னுடு தங்கள் இராஜ்ஜியத்திற்கு வரத் தங்களுக்குத் தைரியமும் துணிகரமுமிருக்கின்றனவா?

இராணி :—ஆகா ஐயமின்றி.

டாக்டர், "தங்கள் கணவர்?" என்றதே, இராணி "ஆகா, அவர் தடையின்றி என்னுடு கூடவே வந்திருந்து யாவும் நடத்துவார்" என்றுள். டாக்டர் "மகாராணி அப்படியானால் நாம் இரகசியமாக, ஒருவருக்குங் கூறுமல் இன்றிரவே இங்கிருந்து புறப்பட்டுவிட வேண்டும்" என்றுர். இராணி யவ்வாறே சம்மதித்து உடனே இரகசியமாய்ப் பிரயாணத்திற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினுள்.

* * * * * *

இரண்டொரு நாட்கள் கழிந்த பின் ஒரு நாள் இரவு சுமார் பத்து மணிக்கு நவீனபுரியிலிருக்கும் துரைத்தனக் கொலையாளியாகிய மாதவன், யாரோ தன் வீட்டுத் தெருக்கதவைத் தட்டுவதைக் கேட்டு துரிதமாகச் சென்று கதவைத்திறந்தான். உடனே ஒரு நெடுஞ் சட்டையும் பாதிக்குமேல் முகத்தை மறைத்துக்கொண்டிருக்கும் தலையணியையும் அணிந்துகொண் டிருந்த ஒரு மனிதன் வாய் பேசாமலும், உள்ளே செல்ல அனுமதிக் கெதிர்பாராமலும் மாதவனை யொருபுறம் விலக்கிக் கொண்டு உள்ளே சென்று அங்கிருந்த ஒரு அறைக்குள் நுழைந்தான்.

மாதவன் கலவரத்தோடு கதவை மூடிக்கொண்டு துரிதமாய் அம்மனிதன் பின்னுல் சென்றுன். அம்மனிதன் அங்கிருந்த தீபத்தினெதிரில் நின்று தன் தலையணி

யைக் கழற்றியதும் மாதவன் திடுக்கிட்டுச் சட்டென்று முழந்தாட்படியிட்டுப் பணிந்து "மகாப்பிரபுவே! தலைவரே! ஏழையேன்..." என்று பூரணமாகக் கூறமுடியாமல் குழறினன். ஏனெனில் அங்கு வந்து நின்றது சத்தியவீரப் பிரபுவாகிய நமது மாயசிங்கனே. மாயசிங்கன் "உஸ், பயப்படாதே. எழுந்திரு" என்றதே மாதவன் திகில் கொஞ்சம் நீங்கி எழுந்து துரிதமாக ஒரு ஆசனத்தை யிழுத்து மாயசிங்கனை யுட்காரச்செய்து எதிரில் கைகட்டி நின்றான்.

மாயசிங்கன்:—"மாதவா! நான் இந்தச் செல்வத்தையும் அதிகாரத்தையும் ஒரு பெருமையாகக் கருதுகிறேனென்று நினைக்கின்றனை? ஒருகாலுமில்லை. நல்லவர்களுக்கும் நிரபராதிகளுக்கும் நன்மை செய்யவும், குற்றவாளிகளைத் தண்டிக்கவும் சக்தி யளிப்பதற்காகவே இவற்றை மதிப்பதன்றி வேறில்லை. உட்கார், உட்கார். சாவதானமாகப் பேசுவோம்" என்றான்.

மாதவன்:—ஆ! குற்றவாளியைத் தண்டிக்க...பிரபுவே, என் மைந்தன் விஷயத்தில் கருணைகாட்டப் பிரார்த்திக்கிறேன். அந்தோ அவன் செய்தத் துரோகம் எனக்கு இதுகாறும் தெரியாது. மாலையவன் தங்களிடம் வந்து மறுபடியும் தன்னை வேலையில் வைத்துக்கொள்ளும்படி கேட்டபோது, தாங்கள் கோபத்தோடு அவன் செய்த சதியைக்கூறி எதிரில் நிற்காமல் அரண்மனையை விட்டுப்போகும்படி கட்டளையிட்டதும், அவன் நேராக இங்கு வந்து என் பாதங்களில் விழுந்து எல்லா விஷயங்களையும் கூறினன். அவற்றைக்கேட்டபோது அவன் எவ்வாறு துணிகரமாகத் தங்கள் முன் வந்தானென்று நான் மிக்க

வியப்படைந்தேன். அந்தோ! இப்போது அந்த மனோவேதனையைப் பூரணமாக அனுபவிக்கிறான். அவன் செய்தது பெருஞ்சதியாயினும், அவன் என் புத்திரனென்பதை நான் மறக்கக் கூடவில்லை.'' என்றான்.

மாயசிங்கன் "பயப்படாதே அவன் உண்மையில் இப்போது மனஸ்தாபப்படுவதாயின் நான் அவனுக்கொரு கெடுதியும் செய்யமாட்டேன்'' என்றதே, மாதவன் "ஆ! இத்தகைய பெருந்தகையுடைய புண்ணியவானென்று நான் நன்கறிவேன். அவன் சிறுவன். இன்னும் உலக அனுபவம் கொஞ்சமேனு மறியாதவன். ஆகையால் மிக்க துஷ்டனும் அக்கிரமஸ்தனுமாகிய அந்த டாக்டர் தங்கவேலுப்பிள்ளையின் நயவஞ்சக மொழிகளால் சுலபமாக மயக்கப் பட்டுவிட்டான். 'உன்னைப்போன்ற சிறு புழுவை ஒரு எதிரியாய் மதித்து அவர் உன்மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ள மாட்டார்' என்று நான் அவனுக்குத் தேறுதல் கூறினேன்'' என்றான்.

மாயசிங்கன்:—"நீ யுண்மையே கூறினை. நான் அவனுக்கொரு கெடுதியும் செய்யமாட்டேன். அவன் சுலபமாக ஏமாற்றப்படக் கூடியவனே. மேலும் நீ என் கூட்டத்தில் ஓர் இரகசிய அவயவியாகச் சேர்ந்த நாள் முதல் இதுகாறும் உன்மேல் நான் எள்ளளவு சந்தேகமேனும் நினைக்கும்படி நேரிடவேயில்லை. பூபாலன் இனியேனும் சத்திய நெறியிற் றவராமல் நடந்து கொள்வானாகில் மறுபடி அவன் என் அன்பைப் பெறலாகும். நான் இப்போது அவனைத் தண்டிக்க வரவில்லை. நான் நாதமுனியைக்கண்டு அவன் வெளி நாட்டிற்குச் சென்று தன் சாமார்த்

தியமான கைத்தொழிலால் பிரசித்தி யடையும்படி ஏற்பாடு செய்வதற்காகவே வந்தேன்'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே மாதவன் மிக்க துயர மடைந்து மாயசிங்கனை நோக்கி "பிரபுவே! அப் பரி தாபமான என் மகன் தங்கள் உதார குணத்தினால் பயன் பெறக்கூடிய நிலைமையில் இப்போதில்லை. தன் தம்பி தங் களுக்குச் செய்த பெருஞ்சதியான சமாசாரம் அவன் மர ணத்தைத் துரிதப்படுத்திவிட்டது. அவன் இப்போதிருக் கும் நிலைமை...'' என்றதே, மாயசிங்கன் "அந்தோ கடவுளே! அப்படியா சங்கதி. சீக்கிரம் வா! அவனைப் போய்க் காண்போம்'' என்றான். உடனே இருவரும் நாதமுனியிருக்கும் மேல்மாடியின் அறைக்குச் சென்றார் கள். நாதமுனி தன் மஞ்சத்தில் சயனித்துக்கொண் டிருக்கிறான். பூபாலன் மிக்க துயரத்தோடு அவன் அரு கில் உட்கார்ந்துகொண் டிருக்கிறான்.

மாயசிங்கன் வந்ததைக்கண்டதே பூபாலன் திடுக் கிட்டு நடுக்கத்தோடெழுந்து, ஒன்றும் பேச முடியாமல் மாயசிங்கன் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து கண் ணீரால் அவன் பாதங்களை நனைத்தான். யாவும் பார்த் துக்கொண்டிருந்த பூபாலன் தமையனாகிய நாதமுனி மாயசிங்கனை நோக்கி "மகாப்பிரபு! என் தம்பியின் மேல் கருணை காட்டும்படி பிரார்த்திக்கிறேன். அவன் நயவஞ் சக மொழிகளால் மயக்கப்பட்டு இத்தகைய பெருங் குற் றத்தைச் செய்துவிட்டான்'' என்றான்.

சத்திய வீரப்பிரபு:—"நண்பனே! நீ யதைப்பற்றி கவலை கொள்ளவேண்டாம். உன் தந்தையும் நானும் அது விஷயமாக முன்னமே பேசி முடித்துவிட்டோம். இனியேனும் அவன் சரியான வழியில் நடந்து கொள்வானாயின் என் ஆதரணையைப் பெறலாம்''

என்று கூறிவிட்டுப் பூபாலன் சிரசைத் தடவி, எழுந் திரு. இன்று முதல் நான் காட்டும் அன்பை மறு படி இழக்க நேர்ந்தால் அது உன் குற்றமாகவே யிருக்கும்'' என்றான்.

பூபாலன் எழுந்து கண்களில் நீர் பெருக, "ஆகா! நான் இத்தகைய கருணைக்கு எங்கேனும் பாத்திரவானு வேனே! என் படுமோசச் செயலால் என் சொந்தத் தமையன் ஆயுளுக்கே இடையூறுண்டாக்கிவிட்டேனே. நான் தமையனைக் கொன்ற மாபாவியாயிற்றே'' என்று பரிதபித்தான். தமையன் அவனுக்கு ஒருவாறு தேறு தல் கூறினான்.

அதன் பிறகு மாயசிங்கனும் மாதவனும் உட்கார்ந் ததும் நாதமுனி "பிரபுவே! தாங்கள் எங்கள்மேல் இத் தகைய கருணையும் அன்பும் காட்டி எனக்குத் தரிசன மளிக்க வந்ததற்காக ஆயிரந்தரம் நமஸ்கரிக்கின்றேன். நாங்கள் தங்களுக்கென்னகைம்மா றளிக்கப்போகிறோம்'' என்றான். மாயசிங்கன் "நண்பனே! நான் உன் நிலைமை யைக்கண்டு மிக்க துயரடைகின்றேன். உனக்கு நான் செய்யக்கூடிய உதவி யேதேனுமிருப்பின் தாராளமாய்க் கூறினால் அதுவே நீ யெனக்குச் செய்த பிரதியுபகாரமாக நினைத்து நான் மிக்க சந்தோஷமடைவேன்'' என்றான்.

மாயசிங்கனுடைய இத்தகைய கம்பீரமான குணத் தைக்கண்ட மாதவன் முதலியோர் மிக்க வியப்படைந்து, அவனைப் புகழ்ந்து போற்றினார்கள். நாதமுனி "பிரபுவே! நான் வேண்டிக்கொள்ளும் முக்கிய விஷயம் ஒன்றுளது. அதாவது என் தந்தை செய்யும் பரம்பரைத் தொழி லாகிய இக்கொலைத் தொழிலால் நாங்கள் மிக்க அவ மானத்தையும் மனோ வேதனையையும் அனுபவிக்கிறோம். அச்சட்டமோ மிக்க கொடுமையானதாக விருக்கிறது.

அத்தொழில் செய்வோன் அரசன் அனுமதியின்றி இராஜ தானி நகரை விட்டுச்சென்றால் பிராணதண்டனை விதிக் கப்படுவான். மகாப்பிரபு! இப்போது நாங்கள் செய்த புண்ணியத்தின் பயனாகத் தாங்கள் இப்போது இந் நாட்டின் அரசராக விருப்பதால் தாங்கள் ஒரு வார்த்தையால் அச்சட்டத்தையே யடியோடொழித்து விடலாகும்..." என்று கூறும்போதே, மாயசிங்கன் "சரி. இந்த நிமிடம் முதல் அச்சட்டம் எடுத்து விடப்பட்டது. நீயும் உன் தந்தையும் இனி நினைத்தபோது புறப்பட்டு அங்கநாட்டுத் தலை நகராகிய புஷ்பகிரிக்குச் சென்றால் என் சிபாரிசால் நல்ல க்ஷேமமான நிலைமையை யடையலாகும்" என்றான்.

நாதமுனி "பிரபுவே எனக்கு அவ்வளவு சந்தோஷத்தை யனுபவிக்கப் புண்ணியமில்லை. என் காலம் நெருங்கி விட்டது. நானும் மனந்துணிந்து அதற்கு ஆயத்தமாக விருக்கிறேன். எனக்காக நீங்கள் விசனப்படவேண்டாம்" என்றான். மாயசிங்கன் "என்னால் பெற்றுக் கொள்ளக்கூடிய அபீஷ்டம் இன்னும் ஏதேனுமிருந்தால் கேள்" என்றான். நாதமுனி "இன்னும் ஒன்றே யொன்றுளது. அதாவது, நான் இவ்வளவு கஷ்டப்பட்டு ஆச்சரியமான சூத்திரங்களை யமைத்துச்செய்த இப்பதுமைகள் பிரசித்தி பெறத்தக்க இடத்தில் வைக்கப்படும் என்று நான் நம்பக் கூடியதாக விருந்தால் என் உயிர் பூரண திருப்தியோடு போகும்" என்றான்.

மாயசிங்கன், "கூடிய சீக்கிரத்தில் உன் தந்தை புஷ்பகிரிக்குச் செல்லட்டும். இவைகள் அரசருடைய பிரதான கண் காட்சிச் சாலையில் வைக்கும்படி நான் ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

இதைக்கேட்டதே நாதமுனி மிக்க சந்தோஷமடைந்து மாயசிங்கனுக்கு மிக்க நன்றியோடு வந்தன மளித்

தித் தன் தம்பியை நோக்கி, "பூபாலா! ஒருமுறை யிப் பதுமைகளின் ஆச்சரியமாகிய மாறுதல்களைப் பிரபு காணும்படிச் செய்" என்றான். பூபாலன் அவ்வாறே அப் பதுமைகளிலுள்ள இரகசிய எந்திரம் இயங்கும்படி அவற் றின் மரைகளைத் திருப்பிவிட்டான். உடனே நாம் முன்பு கூறியுள்ளபடி உயிருள்ளவைகள் போலவே தோன்றி அவ்வுருவங்கள் மரணமடைந்து அழியும் மாறு தல்களை படிப் படியாக அடையத் தொடங்கின. இராணி, சித்ராங்கி, புண்ணியகோடிப் பிரபு, டாக்டர் தங்கவேலுப் பிள்ளை யிவர்கள் உருவங்களனைத்தும் மாறுதல்களை யடையத் தொடங்க, மாயசிங்கன், இராகவன் இந்த இரண்டு உருவங்கள் மட்டும் அசையாமல் அப்படியே யிருப்பதைக் கண்ட மாயசிங்கன் வியப்போடு நாதமுனியை நோக்கினான். நாதமுனி அக்குறிப்பை யறிந்துகொண்டு, "பிரபுவே! இந்த இரண்டு உருவங்களும் அழியும் மாறு தலை யடையும்படி செய்ய எனக்கு மனம் வரவில்லை. ஆகையால் இவற்றில் வைத்திருந்த சூத்திர இயந்தி ரத்தை யெடுத்து விட்டேன்" என்றான்.

யாவரும் அம்மாறுதல்களைக் கவனித்துக்கொண்டே யிருந்தார்கள். அவை ஒவ்வொரு மாறுதலாக அடைந்துகொண்டேபோய் சவத்தின் தோற்றத்தை யடைந்து வீங்கி யழுகிய பின் கடைசியில் தடாலென்று கீழே வீழ்ந்தன. அதேசமயம் நாதமுனி உட்கார்ந்து கொண்டிருந்தவன் திடீலென்று தலைதொங்கி படுக்கை யில் சாய்ந்து விட்டான். மாதவனும் மாயசிங்கனும் சட்டென்று அவனை யுற்று நோக்கினார்கள். பூபாலன் ஓடிப்போய்த் தன் தமையனிடம் குனிந்து அவன் முகத் தைப் பார்த்ததும் "அய்யோ அண்ணா!" என்று முகத்தி லறைந்துகொண்டு கதறியழத் தொடங்கினான்.

உடனே மற்ற இருவரும் சங்கதி யறிந்துகொண்டார்கள். அத்தகைய சாமார்த்தியமும் ஆச்சரியமுமான பிரதிமைகளைச் செய்த புத்திமானுன நாதமுனி இம் மண்ணுலகை விட்டு விண்ணுடு சேர்ந்தான்.

51-வது அத்தியாயம்.

இராணி முதலியவர்கள் ஆத்மவிலாசம் வந்து சேர்தல்—அங்கநாட்டுச் சேனையைத் துரத்த ஆலோசனை—வில்வநாதனும் பூபாலனும் சந்தித்தல்—பூபாலனுடைய இரகசியங்கள் வெளியிடப்படல்— வில்வநாதன் டாக்டரைப்பற்றிய உண்மைகளை யறியத் தொடங்கல்.

மேல் அத்தியாயத்திற் கூறப்பட்ட கடைசி சம்பவம் நடந்த இரண்டாவது நாள் இரவு சுமார் பத்து மணி யிருக்கும். அச்சமயம் ஆத்ம விலாச மாளிகையில் ஆத்மநாதம் பிரபுவும் அவர் பத்தினி, புத்திரன், புத்திரி இவர்களும் போஜனம் முடித்தாயிற்று. சதிபதிகளிருவரும் தங்கள் நாடு அங்கநாட்டரசன் கையில் சிக்கிக்கொண் டிருப்பதைப் பற்றி சம்பாஷிக்கலாயினர். குசலாம்பாளும், வில்வநாதனும் அறையின் ஒரு பக்கம் உட்கார்ந்து தங்கள் மூதாதைகளின் சரித்திரம் எழுதப் பட்டிருந்த கையெழுத்துப் புத்தகங்களைப் பார்த்துக் கொண் டிருந்தார்கள். அச்சமயம் ஒரு வேலைக்காரன் பிரபுவிடம் வந்து “டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் வேறு யாரோ ஒரு சீமாட்டியும் ஒரு சீமானும் வந்திருக்கிறார்கள்” என்று கூறினன். இதைக் கேட்டதே பிரபுவின் முகத்தில் வியப்பான ஒரு மாறுதலுண்டாகியது.

அவர் வேலைக்காரனை நோக்கி "உடனே அவர்களை யுள்ளே யழைத்துவா" என்றார்.

சீமாட்டி "அது யாராகவிருக்கலாகும்?" என்றாள். வில்வநாதன் "ஆ! டாக்டர் க்ஷேமமாகவே இருக்கிறார் என்று சந்தோஷமடைகிறேன். ஆனால் அவர்கூட வந்திருப்பவர்கள் யாராகவிருக்கலாம்?" என்றான். பிரபு "நான் ஒரு சந்தேகங்கொள்கிறேன். எல்லாம் சற்று நேரத்திற்குள் தெரிந்து விடுகிறது" என்றார். அவர் அப்படிக் கூறி வாய்மூடுமுன், முன்னே டாக்டர் தங்கவேலுப்பிள்ளையும் அவர் பின்னால் ஒருமாதும் ஒரு ஆடவனுமாக அறைக்குள் வந்தார்கள். பிரபு அவர்களைக் கண்டதும் எழுந்து "ஆ! நான் கொண்ட சந்தேகம் சரியே" என்று கூறிக்கொண்டே போய் "மகாராணி! தங்களுக்கு நல்வரவு கூறுகிறேன்" என்று இராணியின் முன் முழங்காலிட்டுப் பணிந்தார்.

டாக்டர் தங்கவேலுப் பிள்ளையோடு வந்தவர்கள் இராணியும் அவள் கணவனாகிய தேவசிங்கம் அரசனுமே. இவர்கள் மூவரும் இரகசியமாக ஜகத்குரு விருக்கும் விக்னபுரியினின்று புறப்பட்டு ஒரு கப்பலிலேறி நவீனபுரி இராஜ்ஜியத்தில் கரையிறங்கி இரகசியமாக இரவில் நடந்து அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அவரவர் அந்தஸ்தின்படி மரியாதை செய்யப்பட்ட பிறகு இராணி தன் ஆபத்து காலத்தில் தனக்கு அடைக்கல ஸ்தானமளிப்பதற்காகப் பிரபுவுக்கும் அவர் பத்தினிக்கும் வந்தன மளித்துவிட்டுக் குசலாம்பாளிடம் பேசிவிட்டுக் கடைசியில் வில்வநாதனை யன்போடுற்று நோக்கி "ஆ பிரபுவே! உம்மைக்கண்டு சில நாட்களாய்விட்டன. என் அரண்மனையில் கண்டது. இதற்கிடையில் எத்தகைய விபரீத சம்பவங்களனைத்தும் நேர்ந்தன. அய்யோ கட

வுளே !" என்றாள். வில்வநாதன் "மகாராணி ! தாங்கள் சந்தேகமின்றி மறுபடி அதே யரண்மனையில் வீற்றிருக்க நேரிடும்" என்றான். இராணி "தங்கள் வார்த்தைக்காக மிக்க வந்தன மளிக்கிறேன். தாங்கள் முன்பு மாயசிங்கனுடைய நண்பரா யிருந்ததாகத் தெரிகிறது" என்றாள்.

வில்வநாதன் :— இப்போதும் அச் சுத்த வீரருடைய பெருந்தன்மையான குணத்திற்காக அவரை என் நண்பராகவே கருதுகிறேன். ஆனால் இப்போது நம் நாட்டிலிருக்கும் கட்சிபேதத்தில் நான் இராஜ விசுவாச முடையவனைதாலும், என் தந்தை தங்கள் கட்சியில் சேர்ந்தவரா யிருப்பதாலும் நானும் அவ்வாறே நடக்கக் கடமைப்பட்டவனுகை யிருக்கிறேன். மேலும் தங்கள் மேல் கூறப்பட்ட குற்றம் அபாண்டமான தென்றும் தாங்கள் அவ்விஷயத்தில் நிரபராதி யென்றும் டாக்டர் தங்கவேலுப் பிள்ளை நன்றாய் விளக்கிக் காட்டினார்" என்றான்.

இராணி அவனுக்கு வந்தன மளித்து விட்டுத் தான் உண்மையாகவே நிரபராதி என்று நடித்து அதற்கு அத்தாட்சியாக ஜகத்குரு தீர்ப்பளித்த சங்கதியைக் கூறினாள். அதன்மேல் தேவசிங்கம் இராஜகுமாரன் அவையனைத்தும் விவரமாய்க் கூறிவிட்டு,

"நாங்கள் விக்னபுரியிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் என்ன செய்வதென்று ஆலோசனை செய்த போது நமது டாக்டரின் அருமையான ஆலோசனையை யனுசரித்து ஒருவாறு முடிவு செய்துக் கொண்டோம். அதன்படி இராணி கொஞ்சகாலம் இங்கு தங்கியிருந்தால் நான் மாறுவேட மணிந்து நவீனபுரிக்குச் சென்று எச்சரிக்கையோடு நம்மிடம் அன்புடையவர்களாகக் கருதப்

பட்ட பிரபுக்களேயும், குருமார்களேயும், படைத் தலைவர்களையும் கண்டு பேசி ஒரு ஏற்பாடு செய்துகொண்டு வருகிறேன். யாவரும் ஆயத்தமான போது ஏக காலத்தில் கிளம்பினல், அங்கநாட்டுச் சேனையை யடித்துத் துரத்தி விடலாம். இராஜதானி நகரைக் கைப்பற்றிக்கொண்டு இராணி மறுபடி இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொண்டதாக விளம்பரப்படுத்தி விட்டால், தங்களுடைய ஒரு வார்த்தையால் இம்மாகாண ஜனங்கள் கிளம்பி இங்குள்ள இராகவப் பிரபுவின் தலைமைக் கீழிருக்கும் அங்கநாட்டுச் சேனையை ஒரு நொடியில் துரத்தி விடுவார்கள்" என்றான்.

இராணி "அதுகாறும் நான் இரகசியமாக இங்கே தங்கி யிருக்கவேண்டும்" என்றாள். நயவஞ்சகத்திலும் பொய் கூறுவதிலும் அக்கிரமத்திலும் கைதேர்ந்த பரம சண்டாளனாகிய டாக்டர் தங்கவேலுப் பிள்ளை மிக்க தந்திரமாகச் செய்த போதனையால் பிரபுவும் அவர் குடும்பத்தைச் சேர்ந்தோரும், இராணி வாலிப காலத்தால் காதல் விஷயத்தில் எப்படியோ தவறாக நடந்துகொண்டிருக்கலாமெனினும் தன் கணவனைக் கொன்றாளென்பது அபாண்டம் என்றே நம்பினார்கள். ஆகையால் இராணி அங்கே தங்கியிருப்பதற்குப் பிரபு மறுத்துக்கூறாமல் பிரியத்தோடு ஒப்புக் கொண்டார்.

இராணியை யறிந்தோர்கள் அங்கு ஒருவருமில்லை. நகரத்திலிருந்து பிரபுவோடு கூடவந்த வேலைக்காரர்கள் மட்டுமே இராணியை யறிவார்கள். இராணி யங்கு வந்திருப்பதை மிக்க இரகசியமாக வைத்திருக்க வேண்டுமென்று அவர்களுக்கு நன்றாய்த் திட்டம் செய்யப்பட்டது. மறுநாள் மாலை வில்வநாதன், மாளிகையைக் காக்கும் தளகர்த்தனாதலால், இராணி முதலியவர்கள் அங்கு வந்திருக்

கும் சங்கதி இராகவப் பிரபுவுக் கெட்டா வண்ணம் காவல்களனைத்தும் எச்சரிக்கையா யிருக்கின்றனவா வென்று சோதனை செய்யப் புறப்பட்டான். அவன் கோட்டையின் நாற்புற வாயில்களையும் பார்த்தபின் கடைசியில் கடற்கரையோரமாக உலவிக் கொண்டே சென்றான். அவன் ஒரு சாலையின் வழியே சிந்தித்துக் கொண்டே செல்லுகையில் பின்னல் யாரோ “ஆ பிரபுவே!” என்று அழைப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு மிக்க வியப்போடு திரும்பிப் பார்த்தான். அருகிலிருந்த பாறைகளின் இடையிலிருந்து பூபாலன் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். பூபாலன் வில்வநாதனருகில் வந்து, “பிரபுவே! தங்களைச் சந்தித்ததற்காக மிக்க சந்தோஷமடைகிறேன். தங்களிடம் மிக்க முக்கியமான சில சங்கதிகளைக் கூறவேண்டுமென்றே இங்கு வந்தேன்” என்றான்.

வில்வநாதன், இவன் வெருவாய் மாயசிங்கனல் அனுப்பப்பட்டே வந்திருப்பான் என்று எண்ணிக் கொண்டு, நீ “என்னைக் காணவேண்டியே யிங்குவந்தா யென்று கருதுகிறேன்” என்றான்.

பூபாலன் :—“ஆம். முதலாவது ஒரு சங்கதி கூறுகிறேன். என் தமையன் நாதமுனி இறந்துபோய் விட்டார்” என்றான்.

வில்வநாதன் மிக்க துயரத்தோடு “ஆ! நான் இதை யெதிர்பார்க்கவே யில்லை. துஷ்டகேது என்னைக் கொல்லக்கருதி துரத்தி வந்தபோது நீயும் உன் தந்தையும் செய்த உதவிகளை நான் மறக்கவில்லை. அவனுசியுத்தத்திற்கு முன்னுள் நான் நகரத்தில்தா னிருந்தேன். உங்களை வந்து காணவே யிருந்தேன். ஆனல் நான் என்

தந்தையோடுகூடத் திடீலென்று நகரைவிட்டுச் செல்ல வேண்டியதாக விருந்தது'' என்றான்.

அதன் பிறகு பூபாலன் தன் தந்தை தன் தமையன் செய்த பிரதிமைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டு புஷ்ப கிரிக்குச் சென்றாரென்று கூறினான். வில்வநாதன் "ஆ! சத்தியவீரப்பிரபு அது விஷயத்தில் உதவிசெய்தார்'' என்றான்.

பூபாலன் மாயசிங்கன் தன் வீட்டிற்கு வந்திருந்ததையும் அப்போது நடந்த சங்கதிகளையும் கூறி அவன் உதார குணத்தை வெகுவாகப் புகழ்ந்தான். வில்வநாதன் "அவர் குணத்தை நானும் உன்னைப்போன்றே புகழ்கிறேன். நீ யிப்போது மறுபடி அப் பிரபுவினிடமா இருக்கிறாய்? அப்படியானால் பழையபடி......'' என்பதற்குள், பூபாலன் "பழையபடி அவருக்குத் துரோகம் செய்து எதிரிக்கு உளவுகூறிக்கொண் டிருக்கிறேனா என்று கேட்கிறீர்களோ? இல்லையில்லை. தாங்கள் சற்று சாவதானமாகக் கேட்டால் நான் செய்தது பெருஞ்சதியாயினும் என்மேல் பரிதாபம் காட்டவும் காரணமிருக்கிற தென்றே கூறுவீர்கள்.'' என்றான்.

வில்வநாதன் "கூறு கூறு! ஆதிமுதலே நீ ஏதோ விசேஷகாரணம் இருந்தே அப்படி நடந்து கொண்டிருக்கவேண்டு மென்று எண்ணியிருக்கிறேன். நாம் அரண்மனை வீதியில் அன்றிரவு சந்தித்தபோதே நான் கூறவில்லையா'' என்றான். பூபாலன் "பிரபுவே! தாங்கள் அப்போது கூறியவற்றில் ஒன்றைக் கூட நான் மறந்ததாகக் கருதவேண்டாம். அது முதல் நான் தங்கள் பெருந்தன்மையும் கருணையும் நிறைந்த குணத்தையும் தங்கள் புத்திமதிகளையும் அடிக்கடி சிந்தித்துக்கொண்டேயிருக்கிறேன். அப்போது தாங்கள் என்னைத்தங்களோடு

கூடவே வசிக்கும்படி கூறினீர்கள். அந்த அன்பை யொருபோதும் மறவேன்'' என்றான்.

வில்வநாதன் :—''ஆம் ஆம் என்னோடு வசிக்கும்படி கூறியதற்கு நீ யளித்தபதில் எனக்கு மிக்க வியப்பாக வும் கோபத்தை மூட்டத்தக்கதாகவு மிருந்தது. அச் சமயம் உன் முகத்தில் ஒருவித விகாரமும் கலவரமு மான மாறுத லுண்டாயிற்று'' என்றான்.

பூபாலன் :—''ஆம். ஆம் நான் கூறியது நன்றியில்லாத பதில் போலவும், முரட்டுத்தனமாகவும் வெறுப் போடும் கூறியது போலவும் தோன்றியிருக்கும். ஆனால் தாங்கள் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையின் கூட வசிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்'' என்றான்.

வில்வநாதன் வியப்படைந்து ''நான் அவரோடு வசிப்பதற்கும் உன் சங்கதிக்கும் என்ன சம்பந்தம்?'' என்றான்.

பூபாலன்:—''தயைசெய்து சற்று நிதானமாய்க் கேளுங் கள். அன்று தாங்கள் சத்தியவீரப் பிரபுவோடு எங்கள் வீட்டிற்கு முதல் முதல் வந்தீர்களே, அப்போது தங்களுக்குப் பிரபு என் தந்தையைக் காட்டியபோது, நான் எவ்வளவு கலக்கமடைந்தேன் கவனித்தீர்களா?'' என்றான்.

வில்வநாதன் :—''ஆம்; ஆம்'' என்றான்.

பூபாலன் ''அது ஏனெனில், என் தந்தை துரைத் தனக் கொலையாளி. அச்சங்கதியைத் தாங்களறிந்தால் கொலைஞன் மகனென்று என்னோடு பேசவும் வெறுப் படைவீர்க ளென்று அவமானத்தாலேயே அத்தகைய கலக்கமடைந்தேன்'' என்றான். வில்வநாதன் ''அப்படி யாயின் என் குணங்களை நீ நன்று யறிந்துகொள்ளவில்லை

யென்று விசனிக்கிறேன். அப்போது எனக்கு இச்சங்கதி தெரிந்திருந்தாலும் அதற்காக உங்கள்மேல் இன்னும் அதிக பரிதாபங் கொள்வேனே யன்றி ஒருபோதும் உன்னை யிகழ்வாய்க் கருதமாட்டேன்'' என்றான்.

பூபாலன்:—"பிரபுவே! தங்களுடைய கம்பீரமான உத்தம குணம் எத்தகையோராலும் அதிகமாகப் புகழத் தக்கது. இனி என் சங்கதியைக் கூறுகிறேன். என் தந்தையின் தொழிலால் என் மனதிற்கு மிக்க வியாகூல முண்டாயிற்று. அந்த அவமானத்தால் ஒருவர் முகத்தில் விழிக்கவும் எனக்குப் பெரிய அவமான மாய்த் தோன்றியது. என் தந்தைக்குப்பின் அத் தொழிலை நானே யேற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் என் தமையன் வியாதியஸ்தன் என்பது தெரிந்த சங்கதி. நானே என் பிராணனை நீக்கிவிடுவ தாயினும், நான் பட்டினியாய் மடியவேண்டியதாயி னும் அத்தகைய தொழிலைச் செய்ய உடன்படவே மாட்டேன். இதனால் இவ்வேதனை என்னால் சகிக்க முடியாததாகிவிட்டது. ஒருநாள் நான் இந்த வியாகூலத்தோடு நகர உத்தியான வனத்தில் மெதுவாய்ச் சென்றுகொண்டே யிருந்தேன். அச்சமயம் வயது முதிர்ந்த ஒரு பெரிய மனிதர் எனக்கு முன் சென்று கொண் டிருந்தவர், திடீலென்று தன் கைக்கோலைக் கைநழுவிக் கீழே விட்டுவிட்டார். நான் ஓடிப் போய் அதை யெடுத்துக் கொடுத்தேன். அவர் பரிதாபத்தோடும் மிக்க அன்போடும் என் முகத்தை நோக்கியதும் நான் வியாகூலமாக விருப் பதை என் முகக் குறியா லறிந்துகொண்டார். அதன்மேல் இருவரும் சம்பாஷிக்க நேர்ந்தது, அவர் பேசிய நயத்தாலும் அவருடைய அன்பான

மொழிகளாலும் அவர் மிக்க நல்லவரென்றும் கருணையாளர் பரோபகாரி யென்றும் எனக்குத் தோன்றியதால் நான் யாரென்பதையும் என் மனதிலிருந்த வியாகூலத்தையும் யாவற்றையும் தாராளமாயவரிடம் கூறிவிட்டேன். அவர் சற்றுநேரம் என்னை யுற்றுநோக்கி 'நல்லவனாகக் காண்கின்றாய் பாபம். நீ எனக்கு ஒரு வேலை செய்யக்கூடும். நான் உனக்கு உதவி புரிவேன்' என்று கூறிக்கொண்டே ஒரு பொன் நாணயத்தை யெடுத்து என் கரத்தில் வைத்து, 'சற்றும் நாணப்படாதே. நாளை யிதேவேளைக்கு இதே விடத்திற்கு வந்து என்னைச் சந்தி; நான் சங்கதி கூறுகிறேன். நான் அவசியம் வருவேன். மறவாதே' என்று கூறிச் சென்றார். எனக்கு அவர்மேல் அன்புண்டாகிவிட்டபடியால் மறுநாள் தவிராமல்போய் அவரைச் சந்தித்தேன். அப்போது அவர் தாம் கருதியுள்ள காரியத்தைச் செய்வதற்கு எனக்குப் போதுமான குணங்களும் சக்தியுமிருக்கின்றனவா வென்றறிய என்னைப் பலவிதக் கேள்விகள் கேட்டார். நான் யாவற்றிற்கும் தக்க விடைகள் அளித்தபிறகு அவர் என்னை யுற்று நோக்கி 'நான் கூறும் வேலை மிக்க புத்தி சாதுரியத்தோடும் சர்வ ஜாக்கிரதையோடும் செய்யத்தக்கது. அதோடு முதலாவதாக நான் உன்னை யந்த வேலைக்காக அமர்த்திக்கொண் டிருக்கிறேன் என்ற சங்கதி யெள்ளளவுகூட ஒரு பூதருக்கும் தெரியலாகாது. நீ யதைச் சரியாகச் செய்வாயாயின் நீ உன் தந்தையின் தொழிலைச் செய்ய வேண்டிய அவசியமில்லாதபடி செய்து விடுகிறேன். அதுமட்டுமல்ல, உன் தந்தையே அச்சட்டத்தின்

பந்தத்திலிருந்து விடுதலை யடையும்படி செய்து விடு கிறேன்' என்று கூறியபின் அப்படிச் செய்யத் தனக்குச் சக்தியுண்டென்று நான் அறியும்படிச் செய்யத் தமது பெயரைக் கூறினர்'' என்றான்.

அவன் கூறியவற்றைக்கேட்ட வில்வநாதன் மனதில் ஒரு பயங்கரமான சந்தேகம் உண்டாயிற்று. ஆயினும் அவன் சாந்தமாகவே "என்ன பெயர் கூறினர்?" என்றான். பூபாலன் "டாக்டர் தங்கவேலுப்பிள்ளை" என்றதே வில்வநாதன் மனதிலுண்டான துயரம், வெறுப்பு, கலவரம் முதலிய உணர்ச்சிகள் இத்தன்மையனவென்று விவரிக்க முடியாது. அவன் யாவற்றையும் மிக்க கஷ்டத்தோடு அடக்கிக்கொண்டு "சரி, அப்புறம் நடந்த சங்கதிகளைக் கூறு" என்றான்.

186495

பூபாலன் கூறத்தொடங்கி,

"அவர் முதலில் துஷ்டகேது இராஜ குமாரனைப் பின் பற்றிச்சென்று அவன் செய்கைகளைப்பற்றி யப்போதைக்கப்போது வந்து தனக்கு அறிவிக்கும்படி கட்டளையிட்டார். நானோ அவர் எத்தகைய தொழில் கூறினும் செய்யச் சித்தமாகவே யிருக்கிறேன். சில நாட்கள் அவ்வாறே செய்துவந்தேன். அப்போது என் தந்தை, மாயசிங்கனுக்குச் சிநேகிதராகிச் சில மாதங்களாயின. ஒருநாள் என் தந்தை யென்னை நோக்கி மாயசிங்கன் என்னைத் தன்னிடம் கையாளாக வைத்துக்கொள்ள விரும்புவதாகவும், தான் அதற்குச் சம்மதித்துவிட்டதாகவும், என்னிடம் கூறினர். அதைக்கேட்டதே யெனக்கு மிக்க வியாகூலமுண்டாய்விட்டது. ஏனெனில் டாக்டரின் சாமார்த்தியமான தந்திரமொழிகளால் நான் அவர்மேல் மிக்க நம்பிக்கை வைத்துவிட்டதோடு அவரிடம் விசுவாசமும் கொண்டிருக்கிறேன். ஆகையால் அவர் சம்பந்தத்தினின்

றும் விலகிவிட எனக்கு விசனமாக விருந்ததோடு அதனால் எங்கள் குடும்பமே கடைத்தேறிவிடும் விஷயம் அடியோடு கெட்டுப்போகும்போ லிருந்தது. ஆகையால் மறுநாள் அவரைச் சந்தித்தபோது மிக்க வியாகூலத்தோடு நடந்த சங்கதியை யவரிடம் கூறினேன். ஆனால் நான் எதிர்பார்த்தபடி அதைக்கேட்டதே யவர் சற்றும் அதிருப்தி யடையாமல், அதற்கு மாறாகச் சந்தோஷமே யடைந்து 'மிக்க நலமாயிற்று, நீ எனக்கு அதிக உதவியே யிப்போது செய்யலாம். மாயசிங்கன் துஷ்டகேதுவின் கட்சியைச் சேர்ந்தவனாதலால் அவன் நடவடிக்கைகளையும் அறிந்து வந்து கூறு' என்று எனக்கு மிக்க நம்பிக்கையான வார்த்தைகளைக் கூறினார். இப்போது எனக்கு மிக்க மனக் குழப்ப முண்டாய்விட்டது. இவ்வாறு நான் வேலைக்குப் போகும் எஜமானுக்கே துரோகமான வேலை செய்வது என் மனத்திற்குத் திருப்தியேயில்லை. சற்று நேரம் சிந்தித்துப் பார்த்தேன். கடைசியில் என் குடும்பத்திற்குள்ள பயங்கரமான அந்த அவமானம் ஒழிவதே முக்கியமானதாக எனக்குத் தோன்றியது. அதன்மேல் நான் அவ்வாறே யொப்புக்கொண்டேன். பிறகு டாக்டர், அரண்மனையிலுள்ள அமரநாதம் பிரபுவின் நடக்கைகளைக் கவனிக்கும்படி அரண்மனையிலும் வேலை வைத்தார்.

இவ்வாறு நடந்துக்கொண் டிருக்கையில் வர வர மாயசிங்கனுடைய களங்க மற்ற உள்ளம், சத்தியமொழி, பெருந் தன்மை, உதாரத்துவம், கருணை முதலிய குணங்களுக்கும் டாக்டருடைய சூது, வஞ்சம், தந்திரம், துரோகம் முதலிய குணங்களுக்குமுள்ள வித்தியாசம் என் மனதிற்குப் புலப்பட்டதும் நான் என் எஜமானனுக்குச் செய்யும் துரோகச் செய்கை என் மனத்தை வருத்தத்

தொடங்கிவிட்டது. ஆகையால் நான் எனக்குள் ஒரு விதத் தீர்மானம் செய்துக் கொண்டேன். அதாவது என் செய்கையால் அக்கிரமமாவது, தீங்காவது நடக்கா தவண்ணம் என் தந்திரத்தால் செய்யத் தொடங்கினேன். அதனால்தான் டாக்டர் துருப்புகளைக் கொண்டு மாயசிங்கன் கூட்டத்தை யடியோடழிக்க வெண்ணியபோது உன் மூலமாக நான் அச் சங்கதி மாயசிங்கனுக்கு எட்டும்படிச் செய்தேன். மாயசிங்கன் என்னை அரண்மனையிலுள்ள சில ஆசாமிகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கும்படி ஏற்படுத்திய பின் நான் பன்முறை அரண்மனைக்குச் சென்று டாக்டருக்குத் தெரியாமலே யாவுமறிந்து கொண்டு சென்றிருக்கிறேன். எனக்கும் மாயசிங்கனுக்கும் அரண்மனையிலுள்ள இரகசிய வழிகளனைத்தும் தெரியும். இச்சங்கதிகளில் ஒன்றைக்கூட நான் டாக்டரிடம் கூறவில்லை. நீ பாழடைந்த மடத்திற்கு வந்த சங்கதியையும் நான் கூறவில்லை. ஒரு சமயம் டாக்டருக்கு என் மேல் சந்தேகம் உண்டாய்விட விருந்தது. எப்போதெனின், ஜனங்கள் கலகம் செய்து அரண்மனையைத் தாக்க வந்தனன்று டாக்டரைக் கொல்ல வேண்டுமென்று கூவினார்களல்லவா! அச் சமயம் நான் உன்னைச் சந்தித்து வீதியைவிட் டப்புறம் அழைத்துச் சென்ற போது டாக்டர் மாடிமேலிருந்தபடி நம்மிருவரையும் எப்படியோ பார்த்து விட்டார். அவர் அதைப் பற்றி என்னைக் கேட்டதற்கு நான் மாயசிங்கன் தங்களை யெங்கோ கண்டு தங்கள் மேல் விருப்பம் கொண்டு தங்களிடம் பொன் ஊது குழலை யளித்திருக்கும் சங்கதி எனக்குத் தெரியுமாகையால் அதை நீ யூதும்படி செய்து ஜனங்களின் கலகத்தைத் தடுக்க முயன்றே னென்று கூறினேன். அவர் அவ்வாறே நம்பிக்கொண்டார். கடைசி

யில் மாயசிங்கன் திடீலென்று ஊரைவிட்டுச் சென்ற போது, தான் திரும்பி வரக் கொஞ்சகாலம் செல்லு மென்றும் வந்த பின்பு என்னை மறுபடி தம்மிடம் வைத் துக்கொள்வதாகவும் கூறி என்னை வீட்டிற் கனுப்பிவிட் டார். அதன் பிறகு டாக்டர் துஷ்டகேது ஏதோ கெடுதி செய்யக் கருதுவதாக எண்ணி மறுபடி யவர் நடக்கை களை வேவு பார்க்கும்படி எனக்குக் கூறினார். நான் அவ்வாறே செய்துகொண் டிருக்கையில் டாக்டரே ஒரு நாள் தான் எங்கோ வெளியூருக்குச் செல்வதாகவும் வர இரண்டொரு வாரங்கள் செல்லும் என்றும் அதற்கிடை யில் நான் துஷ்டகேது நடவடிக்கைகளையும் அரண்மனையி லுள்ள சிலர் செய்கைகளையும் கவனித்துக்கொண் டிருக்க வேண்டு மென்றும், தான் திரும்பி வந்ததே எனக் களித்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதாகவும் கூறி னார். அவர் சென்ற சில நாட்களுக்குள் துஷ்டகேது எப்படியோ பல மடைந்துவிட்டான். இராணியின் நண் பர்களனைவரும் பிடிக்கப்பட்டு மரண தண்டனை விதிக் கப்பட்டார்கள். டாக்டர் ஓடி விட்டதால் தப்பித்துக் கொண்டார். அதோடு அவரால் என் குடும்பத்தின் அவ மானம் ஒழியுமென்று நம்பியது பகற் கனவாய்விட் டது. அடுத்தாற்போல் அங்க நாட்டுச் சேனை வந்து நாட்டைப் பிடித்துக்கொண்டது. சத்தியவீரப் பிரபு இராஜப் பிரதிநிதியாக அமர்ந்துவிட்டார். டாக்டரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குப் பரிசளிப்பதாய் விளம் பரப் படுத்தப்பட்டது. சத்தியவீரப் பிரபு மூலமாய் என் கோரிக்கை நிறைவேறுமென்று நம்பிக்கொண்டு அவரைக்காண அரண்மனைக்குச் சென்றேன். அந்தோ என்னைக் கண்டதும் அவர் கோபாவேசத்தோடு என் துரோகச் செய்கையை யெடுத்துக்கூறி 'ஒருவிநாடிகூட நீ

என் எதிரிலிருக்க வேண்டாம். உடனே அரண்மனையை விட்டுப் போய்விடு' என்றார். அச்சமயம் நான் பட்ட மனோவேதனை கடவுளே யறிவார். பிரபு அரண்மனையைக் கைப்பற்றிக்கொண்டு அங்கு இருந்த யாவற்றையும் சோதனை செய்தபோது, டாக்டரின் பெட்டியிலிருந்து நான் அவருக்கெழுதிய கடிதங்கள் அனைத்தும் பிரபு விடம் சிக்கின—'' என்றான்.

வில்வநாதன்:—"ஆயினும் அதன்பிறகு அவர் உன்னை மன்னித்துவிட்டு டாக்டர் வாக்களித்த யாவற்றை யும் அவரே நிறைவேற்றிவிட்டா ரல்லவா?'' என் றான்.

பூபாலன்:—ஆம் ஆம். என் தமையனுக்காக யாவும் செய்தார். பிரபு, இப்போது நான் பரிதாபத்திற் குரியவனென்று தங்களுக்குப் புலப்படுகிறதா?

வில்வநாதன்:—ஆகா; தடையின்றி, மேலும் உன் நடக் கையால் நீ நடந்துகொண்ட துரோகத்திற்கு அதிக மாகவே ஈடு செய்துவிட் டிருக்கிறாய்.

பூபாலன்:—"ஆ! இப்போது பிரபுவுக்கு என் நடக்கைகள் யாவும் தெரிந்தால் முக்கியமாக தங்கள் மூலமாக அனுப்பிய எச்சரிக்கையால் அவர் பூரணமாக என்னை மன்னித்து மறுபடி தன்னிடம் வேலையில் வைத்துக்கொண்டார். ஆயினும் நான் நியாயாதிபதி முன் சாட்சி கூறியதால் டாக்டருக்கு என் நடவடிக் கைகள் தெரிந்துவிட்டதால் அவர் என்னைக் கண் டால் பயங்கரமாக வஞ்சம் தீர்த்துக்கொள்வார்'' என்றான்.

வில்வநாதன் :—"நீ எப்படி சாட்சி கூற நேர்ந்தது?'' என்றான்.

பூபாலன், "துஷ்டகேது திடீலென்று செல்வாக்கடைந்தபோது அவனே பட்டத்திற்கு வருவான்போலிருந்தது. நான் மாயசிங்கனுடைய வேவு ஆளாகவிருந்ததையவனறிவான். அவன் தந்திரமாக எனக்கு எவ்வளவு சங்கதி தெரியுமென்று அறிந்துகொண்டு அந்த உண்மையைக் கூறினல் டாக்டர் செய்வதாய்க்கூறிய நன்மையைத் தான் செய்வதாக வாக்களித்ததோடு மறுத்தால் தண்டிப்பதாகப் பயமுறுத்தினன். அச்சமயம் என்னைக் காப்பாற்றத் தக்க துணை யொருவரும் நகரிலில்லை. அதனல் சாட்சி கூற நேர்ந்தது. ஆனல் சமீபத்திலேயே அங்க நாட்டுச் சேனை இராஜ்ஜியத்தைக் கைப்பற்றிக்கொண்டதால் துஷ்டகேதுவால் ஒன்றும் செய்யமுடியாமற் போய்விட்டது" என்ருன்.

வில்வநாதன் துயரத்தோடு "நண்பனே! நீ கூறிய சாக்ஷியத்தைப்பற்றி நான் அதிகமாய்ச் சிந்தித்தேன். ஒரு உண்மை நீ கூறவேண்டும். ஆம் கட்டாயம். கடவுள் முன் கூறுவதாக நினைத்துக்கொள். அமரநாதன் அக்கிரமமாய்க் கொல்லப்பட்டானென்று உன் மனசாட்சிப்படி நீ நம்புகிருயா?" என்ருன். பூபாலன் "ஆம். நம்புவது மட்டுமல்ல. அமரநாதம் இராஜகுமாரன் அதே பட்டுக் கயிற்ருல் சுருக்குபோட்டுக் கொல்லப்பட்டானென்று நான் சத்தியம் செய்வேன்" என்ருன்.

52-வது அத்தியாயம்.

வில்வநாதன் யாவும் பூரணமாயறிதல்—பூபாலன் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையைச் சந்தித்தல்—பின்னும் கொலைத்தொழில்—தேவசிங்கன் நயனபுரிக்குச் செல்லல்—வில்வநாதன் மனவேதனை—அவன் இராணியைச் சந்தித்தல்—சம்பாஷணை — இராணியின் தவறான அபிப் பிராயம்—விபரீத சம்பவங்கள்—டாக்டர் தோன்றுதல்.

பூபாலன் கூறியதைக் கேட்ட வில்வநாதன் மனம் பதைத்து. "அப்படியானல் டாக்டரும் இராணி யும் அதிற் சம்பந்தப்பட்டவர்கள் தானே?" என்றான்.

டாக்டரின் நடக்கையைப் பற்றி தான் வெளியிட்ட தால் வில்வநாதன் மனதிற்கு மிக்க வியாகூல முண்டாய் விட்டதென்று பூபாலன் அப்போதுதான் கவனித்தான். அதனால் அவன் உடனே விடைகூற மயங்கினான். இதை யுணர்ந்த வில்வநாதன் அவனை நோக்கி "நண்பனே நீ யொன்றுக்கும் யோசிக்க வேண்டாம். நான் சிறு குழந்தையல்ல. அவர்கள் உண்மையில் அத்தகைய அக் கிரமங்களைச் செய்பவர்களாயின் நான் அவர்கள் விஷயத் தில் நன்றியாவது இரக்கமாவது பாராட்டுவது குற்றமே யாகும். நீ என்ன சங்கதி கூறினாலும் நான் அதனால் வியாகூலமாவது கோபமாவது அடையமாட்டேன். ஆகையால் நீ அச்சமின்றி உண்மையைக் கூறு" என்றான்.

அதன் மேல் பூபாலன் "பிரபுவே! இனி நான் யாவும் தங்களுக்குக் கூறவேண்டியதே. இராணியும் டாக்டரும் அமரநாதம் இராஜகுமாரர் கொலையில் நேரா கச் சம்பந்தப் பட்டவர்களே. இச்சந்தர்ப்பத்தில் நான் கூறவேண்டியதைப் பூரணமாகக் கூறி விடுகிறேன். சத்

திய வீரப்பிரபுவே அனேக முக்கிய விஷயங்களைத் தங்களிடம் கூறும்படி என்னை யனுப்பினர். அவருடைய பெருந்தன்மையான குணங்களைப்பற்றி நான் தங்களுக்குக் கூறவேண்டியது அனுவசியமே. தங்களுடைய பரிசுத்த மனதையும், சத்திய நெறியையும், சாந்தம் உதாரகுணம் முதலியவைகளையும் பற்றி அவர் விசேஷமாய் மெச்சிக் கொள்வதோடு தமது சொந்தபுத்திரன் போலவே தங்களை யெண்ணி அவ்வாறன அன்பைத் தங்கள் மேல் வைத்திருக்கிறார். முன் இருந்ததைவிட தங்கள்மேலிருந்த அவருடைய அன்பு இப்போது அதிகமாகவே விர்த்தியடைந் திருக்கிறதன்றிச் சற்றேனும் குறையவில்லை. ஆயினும் அவர் இப்போது தாங்கள் தங்கள் தந்தையின் பிரியப்படி அவர் கட்சியில் இருப்பதை விட்டு விட்டுத் தமது கட்சிக்கு வந்துவிட வேண்டுமென்று எதிர்பார்க்கவில்லை. தாங்கள் அங்க நாட்டரசரை அரசராக ஒற்றுக் கொள்ளவேண்டுமென்றும் அவர் கோரவில்லை. ஆனல் தங்கள் விஷயத்தில் அவருக்கு ஒரு பெரும் பயம் இருக்கிறது. அதாவது, நயவஞ்சகப் பேச்சிலும், தந்திரத்திலும், எப்பாதகத்திற்கும் அஞ்சாத துணிகரச் செயலிலும் மிக்க சாமர்த்தியம் வாய்ந்தவராகிய டாக்டர் தங்கவேலுப்பிள்ளை கள்ளங்கபடு சூதுவாதுகளின் இயற்கையையே யறியாத தங்களை மிகச் சுலபமாய் மயக்கிவிடக் கூடும். ஆகையால் அந்த ஆள் எப்படியாவது தந்திரமாகத் தங்கள் இருப்பிடத்திற்கு வந்து மிகத்தந்திரமாக வார்த்தையாடி தங்கள் இராணி யிடத்திலும் இராணியின் கணவனிடத்திலும் இரக்கங் கொண்டு அவர்களுக்காக அங்கநாட்டரசனுக்கு விரோதமாகக் கிளம்பும்படி செய்து விடுவார் என்றே பயப்படுகிறார். அப்படி நேர்ந்தால் அவர் தங்களோடும் தங்கள் தந்தையோடுமே யுத்தம்

செய்யும்படி நேரிடும். ஆனால் அவருக்கோ தங்களுக்கு எள்ளளவு துன்பம் செய்யவும் மனம்வராது. இக்காரணத்தால் அவர் தன் அரசனுக்குத் துரோகம் செய்வதாக முடியும். இன்றேல் தமது பொருப்பான அந்தஸ்தை யடியோடு விட்டுவிடவேண்டும். ஆதலின் எல்லா விஷயங்களையும் தங்களுக்குத் தெளிவா யறிவிக்கும்படி யென்னை யனுப்பினார்'' என்றான்.

வில்வநாதன், "நண்பனே! இந்த விஷயங்கள் எப்படி முடிந்தாலும் சரி. நானும் என் தந்தைதாயாரும் அவர் விஷயத்தில் வைத்துள்ள நன்றியைமட்டும் ஒருபோதும் மறவோம். அவருடைய கம்பீரமான உதாரகுணங்களைப் பற்றி எங்களுக்கிருக்கிற மதிப்பும் அபிமானமும், எனக்கு அவர் மேலுள்ள அன்பும் ஒருபோதும் மாறா, குறையா. நீ எதற்கும் யோசிக்காமல் இன்னும் கூற வேண்டிய யாவற்றையும் பூரணமாய்க் கூறிவிடு'' என்றான்.

பூபாலன் :—"பிரபுவே! அவருடைய உதாரகுணத்தின் சுபாவப்படியே, இராணி கொஞ்சம் வயதுடைய மாதாகையால் பிறர் துர்ப்போதனையைக் கேட்டு மதிமயங்கி ஏதோ தவறான வழிகளில் நடந்து கொண்டாள் என்றே அவர் முதலில் எண்ணி அவள் விஷயத்தில் கருணையும் பரிதாபமே கொண்டிருந்தார். பிறகு அவர் அடிக்கடி அரண்மனையில் சென்றிருக்க நேரிட்டபோது இராணியைப் பற்றிய அனேக சங்கதிகள் அவருக்குத் தெரிந்தன. கடைசியாக அவர் இராகவப் பிரபுவை யழைத்துக்கொண்டு போனதற்கு முன்தினம் இராணியின் நடக்கையைப் பிரத்தியக்ஷமாகக் கண்டு விட்டார். உடனே இராணி சற்றும் மதிமயங்கி நெறிதவறி நடந்து கொள்ளவில்லை யென்றும் அச்சம் மடம் நாணம் கற்பு யோக்

கியதை யென்ற ஒன்றுமே எள்ளளவும் அவளிட மில்லையென்றும், துர் நடக்கைகளில் மனம்போன போக்கே செல்லும் வழக்கத்தில் நிலையாக நின்று விட்டாளென்றும், இனி சீர்த்திருத்த மடைந்து நல்வழியிற் றிரும்பமுடியாத அவ்வளவு தூரம் துர் நடக்கைகளில் ஆழ்ந்து விட்டாளென்றும் அவருக்கு ஐயமறத் தெரிந்துவிட்டது. அப்படிக்கின்றேல் இராணி இனி அரசாள உதவவே மாட்டாள் என்று அவர் மனதிற்பதிந்திராது. அவ்வாறு பட்ட தாற்றான் அவள் இராணியாயிருக்க யோக்கியதை யற்றவள் என்று தீர்மானித்து விட்டார். இவ்வளவே இராணியைப் பற்றிய விஷயம். இனி டாக்டர் தங்கவேலுப் பிள்ளையோ! அய்யோ கடவுளே! அவர் செய்த கொலை அமரநாதம் இராஜகுமாரர் ஒருவர் மட்டுமல்லவே!'' என்றதே;

வில்வநாதன் திடுக்கிட்டு “அய்யோ ஆண்டவனே! இன்னும் வேறு கொலைகளா? கூறிவிடு! கூறிவிடு! நான் இரக்கமும் துயரமும் காட்டும் வேளைபோய்விட்டது. தாராளமாய் யாவும் கூறிவிடு'' என்றான்.

பூபாலன் “இருக்கட்டும். சில வருடங்களுக்கு முன் டாக்டர் தேவராஜுப் பிள்ளையென்ற் பிரபல வைத்தியர் இருந்து அவர் கொலைசெய்யப் பட்டாரே தெரியுமா?'' என்றான். வில்வநாதன் ஆம் அந்தோ! அதைப்பற்றி நினைக்கும் போதெல்லாம் என்தாய் தந்தையர் சொல்லொணா மனோவேதனை யடைகின்றனர். அவர் என் பெற்றோர் மட்டுமல்ல, என் பாட்டனாருக்குகூட மிக்க அருமையான நண்பர். ஏன் அவர் தங்கவேலுப் பிள்ளையின் தமையனாரே. இப்போ ததைப்பற்றி யென்ன?

அவரைக் கொன்றவன்கூட சிறைச் சாலையினின்று தப்பித்துக் கொண்டு எங்கோ ஓடி விட்டான்'' என்றான்.

பூபாலன் :—“ஓடிவிட்ட அம்மனிதனல்ல தேவராஜப் பிள்ளையைக் கொன்றவன். தேவராஜப் பிள்ளையைக் கொன்றவன் அவர் தம்பியாகிய இதே டாக்டர் தங்கவேலுப் பிள்ளையே'' என்றான்.

இதைக்கேட்ட வில்வநாதன் மிக்க மனவருத்தமும் வியப்புமடைந்து “அப்புறம் இன்னம் என்ன? சீக்கிரம் கூறிவிடு'' என்றான்.

பூபாலன் :—“பிரபுவே! இன்னும் தெரிந்தது ஒன்றேயிருக்கிறது. அதாவது இராணியின் பெரிய தந்தையாகிய இரணவீரகேசரி அரசன் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையாலேயே விஷம் வைத்துக் கொல்லப்பட்டான்'' என்றான்.

இதைக்கேட்டதே வில்வநாதன் “கடவுளே! இவை யாவும் உண்மையாக விருந்தால்......'' என்ற போது, பூபாலன் “பிரபுவே! நான் கூறுவதுயாவும் கடவுளறிய உண்மையே'' என்றான்.

வில்வநாதன் மனம் தத்தளித்துவிட்டது அவன் “அய்யோ! நான் தந்தைக்குச் சமதையாக அன்பு வைத்த மனிதன், மகா யோக்கியனென்றும் பெரிய மனிதனென்றும் நம்பியிருந்த மனிதன். இம்மனிதன் இராஜக்கொலை..சகோதரக்கொலை...அமரநாதன் கொலை.. கடவுளே...கடவுளே...''என்றுமனந்துடித்துப் பூபாலனை நோக்கி “நண்பனே! நீ போய் வரலாகும். நான் ஒரு விநாடிகூடத் தாமதிக்கலாகாது. மாளிகைக்குச் சென்று என் அறையில் தனியே இருக்கவேண்டும். ஆம். போகலாம். ஆனல் இரவு எட்டு மணிக்குமேல் இதே

விடத்தில் என்னை யின்னொரு முறை பார்த்துவிட்டுப் பிறகு நீ திரும்பிச் செல்லலாம்'' என்றான்.

வில்வநாதன் அவ்வாறு கூறிவிட்டு மாளிகையை நோக்கிச் சென்றதே பூபாலன் கடற்கரை யோரமே சென்றான். அங்கு செங்குத்தான மிக்க உயர்ந்த பாறைகளே கரையிலிருந்தன. பாறையின் பக்கத்தில் மிக்க ஆழத்தில் கடல் அலைகள் வந்து மோதிக்கொண்டிருந்தன. அவன் சற்றுதூரம் சென்று ஒரு திருப்பத்தில் சட்டென்று திரும்பியபோது, திடீலென்று டாக்டர் தங்கவேலுப்பிள்ளை யெதிரில் நெருங்கிவிட்டதைக் கண்டான். டாக்டர் அவனைக் கண்டதும் "ஆ! பூபாலன்'' என்றார்.

பூபாலன் சற்று முன்பே அவரைப்பற்றி சம்பாஷித்துக்கொண்டிருந்தபடியால், இப்போது திடீலென்று அவரைக் கண்டதால் மிக்க வியப்படைந்து திடுக்கிட்டு விட்டான். டாக்டர் மிக்க கோபத்தோடும் வெறுப்போடும் அவனைத் தீட்சணியமான பார்வையாய் நோக்கி,

"அடே குடிகேடிச் சண்டாளப்பயலே! இங்கே என்னத்திற்காக வந்தாய். நீ செய்த கொலைத்தொழிலை முழுதும் நிறைவேற்றவா? முனனே மரணதண்டனை யடையச் செய்தாயே அவர்களோடு என்னையும் போய்ச் சேரும்படி செய்யவா?'' என்றார்.

பூபாலன்.—"நான் அப்படிப்பட்ட எவ்விதக் கெட்ட எண்ணத்தோடும் இங்கு வரவில்லை. நீங்கள் இங்கிருப்பதே எனக்குத் தெரியாது'' என்றான்.

வில்வநாதன் அவனிடம் பேசியபோது டாக்டராவது இராணியாவது அங்கு வந்திருக்கும் சங்கதியைப் பற்றி குறிப்பாகவேனும் வெளியிடவில்லை.

டாக்டர் பூபாலனை நோக்கி "நீ ஏன் இங்கு வந்தாய்" என்று மிக்க கடுமையான பார்வையோடு பார்த்தார்.

பூபாலன்:—"நான் இன்னமும் உமது அடிமையல்ல. அய்யோ முன்னமே உம்முடைய படுமோசமான தந்திரத்தில் சிக்காமலிருக்காமற் போய்விட்டேன். நீர் கூறிய ஆசைச்சொற்களில் மூடத்தனமாய் மயங்கிவிட்டேன். ஆயினும் அதற்காக மிக்க மனத் தாபமடைந்து கடவுளைத் துதித்துக்கொண்டேன். இனி உம்முடைய தந்திர சாமார்த்தியங்களெல்லாம் என்னிடம் பலிக்காது." என்றான்.

டாக்டர் உடனே மிக்க சாந்தத்தோடும் அன்போடும் வாலிபனை நோக்கி "பூபாலா! ஒரு வார்த்தை கேள். முன் கூறியபடி உன் குடும்பத்திற்கு உதவி செய்ய இப்போதும் என்னால் முடியும். நீ மட்டும் மறுபடி நான் கேட்கும் உதவியைச் செய்தால் நான் உன்னை மன்னித்து..." என்றதே,

பூபாலன் ஆத்திரத்தோடு "மன்னுப்பா! உமது தயவுக்கு நான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கவில்லை. என் குடும்பத்திற்கு நீர் செய்வதாகக்கூறி என்னை யேமாற்றிய அந்த உதவி முன்னமே செய்தாய்விட்டது. என் தந்தையும் என் குடும்பமும் அந்தக் கோரமான சட்டத்திலிருந்து விடுதலை பெற்றோம். என் தந்தை இப்போது நவீனபுரியைவிட்டு நெடுந்தூரம் போய்விட்டிருப்பார். மகா உத்தம குணவானும் புண்ணிய புருடனுமாகிய அச் சத்தியவீரப் பிரபு உன்னால் ஒருபோதும் செய்ய முடியாத உதவியெல்லாம் எங்களுக்குச் செய்தார்" என்றான்.

டாக்டர்:—"ஆ! அப்படியாயின் நீ இப்போது மறுபடி

யும் அக்கள்ளப் பிரபுவினிடம் போய்ச் சேர்ந்துவிட்டிருக்கிறாய்?'' என்றான்.

பூபாலன்:—''ஆம். அத்தகைய சுத்த வீரனிடம் இருப்பதை நான் மிக்க கௌரவமாகவே கருதுகிறேன்'' என்றான்.

டாக்டர் மிக்க கோபாவேசமடைந்து ''அடா துஷ்டப்பயலே! நீ ஏதோ கெடுதிக்கே இங்கு வந்திருக்கிறாய். உன்னால் இராணி ஒருபோதும் அவள் பகைவரிடம் சிக்கலாகாது. ஒருபோதும் என் கோரிக்கைகள் உன்னால் கெடுக்கப்படலாகாது'' என்று கூறிக்கொண்டே திடீலென்று அவனைப்பிடித்துப் பாறையோரத்திலிருந்து கடலிற் றள்ளிவிட்டான். பூபாலன் வீறிட்டலறி ஒரே கூச்சலோடு கடலிற் போய் வீழ்ந்தான். டாக்டர் ஓரத்தில் நின்று குனிந்து பார்த்தான். சற்றுநேரம் வரையில் கடலில் ஒன்றுமே புலப்படவில்லை. அதன் பிறகு பூபாலன் அணிந்துகொண்டிருந்த தலையணிமட்டும் கடலில் மிதந்துகொண் டிருக்கக்கண்டான்.

வில்வநாதன் பூபாலனுக்குக் கூறியபடி சரியாக எட்டு மணிக்குக் கடலோரம் சென்று அந்த விடத்தில் நெடுநேரம் காத்திருந்தான். பூபாலன் வரவில்லை. என்ன அசந்தர்ப்பத்தால் வரவில்லையோவென்று மனவருத்தமடைந்து துயரத்தோடு மாளிகைக்குச்சென்று தன் அறைக்குள் பிரவேசித்துக் கதவைத் தாளிட்டுக்கொண்டான். டாக்டர், இராணி யிவர்களை நிரபராதிகளென்றும் பரிதாபப் படக்கூடியவர்களென்றும் அவன் பெற்றோர் கருதியிருந்தனர். இப்போது அவர்களுடைய உண்மை தெரிந்துவிட்டது. ஆனால் அத்தகைய அநீத நடக்கைகளைத் தன் வாயால் தன் பெற்றோரிடம் கூற அவன் மனதிற் கொப்பவில்லை. ஆகையால் பூபாலனை

இரகசியமாக மாளிகைக்குள் அழைத்துச் சென்று அவன் வாயாலேயே அவர்கள் நடக்கைகளை நிரூபிக்கவேண்டு மென்று கருதினான். ஆனால் அவன் எதிர் பார்த்தபடி வராதபடியால் அந்த எண்ணம் நிறைவேற வில்லை.

வில்வநாதன் மனோவேதனை யதிகமாய்விட்டது. அத்தகைய சண்டாளர் முகத்தில் விழிக்கவே அவனுக் குப் பிரியமில்லை. நாமே நேராய் நமது தந்தையிடம் கூறி அவர் எவ்வாறு நடந்து கொள்வ தென்று கருது கிறார் என்பதை யறிந்து கொள்ளலாமா வென்று சிந்தித் தான். மறுபடி, "பூபாலன் நாளை காலை வருவான். அப் போதழைத்து வரலாம்" என்று சிந்தித்துக் கொண்டான் மறுநாள் பகல்முழுதும் அவன் தன் அறையிலேயே யிருந் தான். இரண்டொரு முறை வெளியில் வந்த போதும் டாக்டரையாவது இராணியையாவது சந்திக்க வில்லை. அவர்களும் தேவசிங்கனும் பகலெல்லாம் இனி நடக்க வேண்டிய தங்கள் விஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்துகொண் டிருந்தார்கள். அன்று மாலை தீபம் வைத்ததும் தேவசிங்கன் ஒரு குருவைப் போல் வேட மணிந்து கொண்டு நயனபுரிக்குப் புறப்பட்டான்.

வில்வநாதனுக்கு எங்கே டாக்டரைச் சந்தித்து விடு வோமோ வென்று பயமாக விருந்தது. ஆகையால் கோட்டை மதில்மேல் உலவச் சென்றான். தனியா யிருப்பதே அவனுக்குப் பிரியமாக விருந்தது. அன்று முழுமையும் எதிர் பார்த்தும் பூபாலன் வராமற் போக வே மறுபடி அவன் மனக்குழப்பம் சகிக் கொணாததாய் விட்டது. உலவிக் கொண்டே சிந்திக்கலானான். சற்று நேரங் கழித்து ஒரு விடத்தில் நின்று அங்கிருந்த சிறு சுவர்மேல் சாய்ந்து கொண்டு "சரி, இனி யாலோசிப்ப

தில் பயனில்லை. நேராய் நமது தந்தையைத் தனியிடத்தில் சந்தித்து அவரிடம் யாவும் கூறுவிடுவதே சரி. இனி ஆலசியம் செய்யலாகாது. பூபாலன் இல்லாவிட்டாலும் நமது வார்த்தையை நம் தந்தை நம்பாமற் போகார். அட சண்டாளர்களே! உங்களைப் பற்றி எத்தகைய விபரீதமான சங்கதிகளை யென் தந்தையிடம் கூற வேண்டியிருக்கிறது..." என்று இவ்வாறு சிந்தித்துக் கொண்டே இருக்கையில் "யார் அங்கே?" என்ற ஒரு சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். இராணி அருகில் வந்து நிற்பதைக் கண்டான். முதலில் மிக்க கோபமே அவன் மனதிலுதித்தது. இராணி யவனை நோக்கி "பிரபுவே தாங்களா? என் கணவன் இப்போது தான் நயனபுரிக்குச் சென்றார். தங்களுக்கு மிக்க அன்பார்ந்த வந்தன மளிப்பதாகத் தங்கள் தந்தையிடம் கூறிச் சென்றார்" என்றாள். வில்வநாதன் அதற்குள் தன் மனதை யொருவாறு தேற்றிக் கொண்டு "அவருக்கு மிக்க வந்தனமளிக்கிறேன்" என்றான். இராணி "தங்கள் நல்ல காற்றிற்கும், கடலில் தோன்றும் சந்திரனுடைய பிரகாசத்தைக் கண்டு களிப்படைவதற்கும் இங்கு வந்ததாகத் தெரிகிறது. நானும் அதற்காகவே வந்தேன். ஆ பிரபுவே! ஆயினும் களிப்புக்கும் எனக்கும் எவ்வளவோ தூரமிருக்கிறது. என் மேல் அபாண்டங் கூறப்பட்டதோடு என் இராஜ்ஜியத்தை யிழந்து, என் குடிகளை யன்னிய நாட்டுச் சேனையின் கையில் ஒப்பித்து விட்டு நானும் என் கணவனும் பரதேசிகளாகி, இப்போது கள்ளரைப் போல் தலை மறைந்து ஒளிந்து கொண்டிருக்கும்படி நேரிட்டு விட்டதே! அந்தோ கடவுளே! என் அந்தஸ்து, அதிகாரம், செல்வம் யாவும் போய்...... ஆ! என் மனதில் சகிக்கொணாத நரக

வேதனை குடிகொண்டு விட்டதே" என்று இவ்வாறு கேட்போர் மனங்கரையும்படிப் பிரலாபித்தாள்.

தந்திர சாமார்த்தியத்தோடு பேசும் வல்லமையுடைய ஒரு அழகுவாய்ந்த மாதின் வார்த்தைகளைக் கேட்டு கடின மனமுடைய எத்தகைய ஆடவனும் மயங்கி விடுகிறானெனின், நயவஞ்சகமும் சூதுவாதும் இன்னதென அறியாதவனும், உலக அனுபவமறியாதவனும், இளகும் மனமுடையவனுமாகிய நமது வில்வநாதன் இராணியின் மேற்கண்ட வார்த்தைகளைக்கேட்டு மனக் கனிவடைவது ஒரு வியப்பல்ல. அவ்வாறு அவன் மிக்க இரக்க முற்றுலும், இராணியைப் பற்றி தான் கேள்விப் பட்ட விஷயங்களை நினைந்து கொண்டதால், இராணியை உற்று நோக்கி, "தாங்கள் அத்தகைய வியாகுல முற்று இருக்கிறீர்கள். தங்களுக்குத் தேறுதல் கூறத் தங்கள் மனதில் நாம் நிரபாராதி என்ற நம்பிக்கை இருக்க வில்லையா ?" என்றான்.

இம் மொழிகளைக் கேட்டதே குற்ற முள்ள இராணியின் மனதில் தீச்சுட்டதுபோன் றிருந்தது. அவள் அச்சமயம் வில்வநாதன் தோளில் தன் கரத்தைக் கோர்த்துக்கொண் டிருந்தாள். எந்தமாதாயினும் ஆடவன் அவள் நடக்கும்போது அவளுக்கு அவ்வாறு பற்றுக் கோடுபோல் உதவி செய்வதுதான் மரியாதை யென்பதும், அவ்வாறு நடந்து கொள்வதுதான் ஸ்திரீகளைக் கௌரவமாக நடத்துவதாகு மென்பதும் அவர்கள் கொள்கை. நமது நாட்டில் கண் மூடித் தனமாய் மேல் நாட்டு ஆசாரங்களைப் பின் பற்றுவதுதான் நாகரிக சீர் திருத்தம் என்று கருதும் மதிமயக்கம் பூண்டவர்கள் எங்கே இந்த வழக்கத்தையும் பின் பற்றிக் கொள்வார் களோ வென்று மிக்க அஞ்சுகிறோம். அவ்வாறு நேர்ந்

தால் கடவுளே நம் பூண்டை யடியோ டழித்துவிடத் தடையே யிராது.

வில்வநாதன் மேற் கண்டவாறு கூறியதே இராணி தேகம் நடுங்கி விட்டது. தன் தோளைப் பற்றி யிருக்கும் கரம் நடுங்குவதை யுணர்ந்த வாலிபன் மனதில் ஒருவிதச் சந்தேக முண்டாகிவிட்டது. உடனே "ஆ! அப்படி நிரபராதி யென்ற நம்பிக்கை உன் மனச் சாட்சிக்கு இல்லா விட்டால்..." என்றான்.

இராணி மனந்துடித்து முகம் சிவந்து வெடுக்கென்று அவன் தோளிலிருந்து தன் கரத்தை இழுத்துக் கொண்டு வில்வநாதனை நோக்கி, "ஆ பிரபுவே! உமது கருத்தென்ன? நீர் கூறியதில் ஏதோ இரகசிய அர்த்தம் இருக்கிறது. தயவு செய்து கூறும்" என்று ஆத்திரத்தோடு கேட்டாள். வில்வநாதன் மிக்க மனக் குழப்ப மடைந்து, அவன் மனதில் பெண்பாலான இராணியின் மேல் இரக்கம் ஒரு பக்கமும், ஒரு சமயம் இவள் உண்மையாகவே கொலை செய்தவளோ என்ற சந்தேகம் ஒரு பக்கமும் உண்டாகவே அத்தகைய கலவரமடைந்த முகத்தோடு, இராணியின் முகத்தை நன்றாய் உற்று நோக்கி எப்படி பதில் கூறுவதென்று மயங்கிக் கடைசியில்,

"மகாராணி! தாங்கள் நிரபராதி யென்பது உண்மையாயின் நான் தங்கள் பக்கத்திலிருந்து என் உயிர் நீங்கும் மட்டும் தங்களுக்காக யுத்தம் புரிவேன்" என்றான்.

வில்வநாதன் தான் வரும்போது ஏதோ வியாகூலமுடையவன்போல தனியேநின்றுகொண் டிருந்ததையும், பிறகு தன்னைக் குறிப்பாய் நோக்கித் தான் நிரபராதியா என்பதைப்பற்றி கேட்டதையும், இப்போது அவன் முகத்தில் தோன்றிய கலக்கமான விகாரத்தையும் கருதி இராணி விபரீதத் தீர்மானங்கொண்டாள். கண்ணாடியைப்

பார்த்தால் பார்ப்பவன் உருவமே யதில் பிரதிபலித்துத் தோன்றுவதுபோல் இராணி தன் மனதிலிருப்பதையே அவன் மனதிலிருக்கிறதென்று கருதிவிட்டாள். அதாவது "வில்வநாதன் நமது அழகையும் கம்பீரத்தோற்றத்தையும் கண்டு நம்மேல் அடங்காக் காதல் கொண்டு விட்டான். அந்த ஏக்கங்கொண்டே இங்கு தனியாக வந்து நின்றுகொண்டிருந்தான். இப்போது நம்மை யருகில் கண்டுவிடவே தன் எண்ணத்தை வெளியிடா தடக்கமுடியவில்லை. ஆனால் நாம் இராணியென்ற அச்சத்தாலும், ஒருசமயம் நாம் நம் கணவனைக் கொன்றோம் என்ற வதந்தி உண்மையாகவே யிருக்குமோவென்ற சந்தேகத்தாலும் தன் காதலை வெளியிடத் தடுமாற்ற மடைகிறான். இனி நம் எண்ணத்தைச் சுலபமாக நிறைவேற்றிக்கொள்ளலாம்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள். ஆதலால், வில்வநாதனை நோக்கி, அவன் கரத்தைப்பற்றிக்கொண்டு,

"பிரபுவே! தங்கள் கருத்தை நான் அறிந்து கொண்டேன். என் மனம் மிக்க மிருதுவான மனமாதலால், உமது மனதில் ஆழ்ந்து இருக்கும் கலக்கம் எனக்கு விளங்கிவிட்டது. ஆனால் தாங்கள் கூறியது என்னைக் குற்றவாளியென்று சந்தேகிப்பதாகவாகிறது. நான் இராணியாகப் பேசும் பட்சத்தில் கோபங்கொண்டு உமது வார்த்தையை மறுதலிப்பதோடு விடையே கூறமாட்டேன். ஆனால் தங்கள் மனோபாவத்தை யறிந்தபின் சாதாரண ஸ்திரீயாகவே விடை பகரவேண்டும். ஆகையால் பொறுமையாகவே 'நான் நிரபராதி' என்று கூறுகிறேன்." என்றாள்.

நேயர்களே! மனிதன் எவ்வளவு நற்குணங்களை யுடையவனாயிருந்தாலும் உலக அனுபவம் என்ற கல்வி

கற்காவிடின், இவ்வுலகிலுள்ள சூது, வஞ்சம், கபடு முத லியவற்றில் ஏமாறுமல் தப்பித்துக்கொள்ள முடியாது. நமது வில்வநாதன் உலக அனுபவ மறியாதவனுதலின் பூபாலன் கூறிய அவ்வளவு சங்கதிகளையெல்லாம் கேட் டிருந்தும் இராணி தன் மாயஜால வார்த்தைகளால் தன்னை யேமாற்றுவதற்கு இடங்கொடுத்து விட்டான். ஆகவே "இராணி கூறுகிறபடி உண்மையாகவே நிர பராதி தானே? அப்படியாயின் பாபம் அபாண்டத்தால் இவ்வளவு துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டாளே" என்று இரக்கங்கொண்டான். அதனுல் எதற்கும் இவள் நிரபராதி யென்பத்தைச் சத்தியமாகக் கூறும்படி கேட் டுக்கொள்ளவேண்டு மென்பதே அவன் எண்ணம். இதனுல், "அந்த எண்ணத்தைத்தான், இராணி தான் தெரிந்துகொண்டதாகக் கூறுகிருள். ஆகையால் நாம் இனி அச்சமின்றி பகிரங்கமாகவே கேட்போம்" என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு,

"மகாராணி! தங்கள்மேல் கூறப்பட்டது அபாண்ட சங்கதியாயிருக்குமாயின், இன்னும் ஆயிர மடங்கதிகமாக உமக்கு ஒவ்வொருவரும் சகாயம் செய்யவேண்டியது கடமையாகிறது" என்றுன்.

இராணி "ஆ! பிரபுவே உமது வீரத்தன்மையை நான் எவ்வளவோ மெச்சிக்கொள்கிறேன். உமது மன நோக்கத்திற்குத் திருப்தி யுண்டாக்க மிக்க சந்தோஷ மடைகிறேன்" என்றுள்.

இதையும் இராணி தான் நிரபராதியென்று சத்தியம் செய்யச் சம்மதிப்பதாகவே வில்வநாதன் கருதிக்கொண் டான். இவ்வாறு கடைசி வரையில் இருவரும் ஒருவர் கருத்தை யொருவர் முற்றும் தவறுகவே எண்ணிக் கொண்டார்கள்.

வில்வநாதன் "ஆ! என் மனதிலுள்ள ஐயம் நீங்கி உண்மை விளங்கி விட்டால்" என்றான்.

இராணி "பிரபுவே! உமது மனதிலுள்ள கருத்தை யறிந்துகொண்டே னென்று கூறியதே விஷயத்தை விளக்கிவிட்ட தல்லவா, இன்னம் என்ன கூற வேண்டும் சொல்லும்" என்றாள்.

வில்வநாதன் "ஓ மகாராணி! உமது வாக்கால் சத்தியமாக ஒரு மொழி கூறி விட்டால் என் மனக் கலக்கம்..." என்றதே, இராணி "ஆம் நானும் சத்திய மாகவே..." என்று தயங்கினாள். வில்வநாதன் மிக்க ஆவலோடு "ஆ! சத்தியமாகவே... அப்புறம்! அப் புறம்!!" என்றான்.

இராணி:—"பிரபுவே! சத்தியமாகவே தங்கள் மேல் காதல்கொண் டிருக்கிறன்" என்று கூறிக்கொண்டே வில்வநாதனை ஆவலோடு தழுவிக் கொண்டாள்.

இராணியின் மொழிகளைக் கேட்டதோடு அவள் செய்கையைக் கண்ட வில்வநாதன் மனதில் அவளுடைய அயோக்கிய நடக்கை நன்கு புலப்பட்டு விட்டது. அது மட்டுமல்ல. அது அவன் மனதிற்கு வேதனையை யுண் டாக்கியது. அவள் செய்கையால் தன் தேக சம்பந்த மான பயங்கர இரகசியம் எங்கே வெளியாகி விடுமோ என்ற பெருந்திகில் அவன் மனதில் தாக்கியது. அவன் அவற்றைச் சகிக்க முடியாமல் இராணியை அப்புறம் உதரி விட்டு, "அய்யோ கடவுளே!" என்று அலறிக் கூவியதும் அடியற்ற மரம் போல் தரையில் வீழப் போனான். வீழ்ந்துவிட்டே யிருப்பான். ஆனல் அச் சமயம் தெய்வ சங்கல்பமாக அருகில் மறைவிலிருந்து நடந்த சம்பவம் யாவும் பார்த்துக்கொண் டிருந்த டாக் டர் தங்கவேலுப்பிள்ளை பாய்ந்து வந்து வில்வநாதனை

யேந்திக் கொண்டான். வில்வநாதன மூர்ச்சையடைந்தான்.

53-வது அத்தியாயம்.

இராணியும் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையும்—வில்வநாதனை டாக்டர் இன்னும் ஏமாற்றமுயலல்—வில்வநாதனும் மறுபடி சந்தித்தல்—இராணியின் ஆபாசச்செய்கை—மாயசிங்கன்.

வில்வநாதனை தாங்கிக்கொண்ட டாக்டர் தங்கவேலுப்பிள்ளை இராணியை நோக்கி "மகாராணி! உங்கள் சம்பாஷணை முழுமையும் நான் ஒரு வார்த்தை விடாமல் கேட்டேன். அய்யோ! ஒரு சிம்மாதனத்தையே யிழந்து விட்டுக் கைப்பற்ற மறுபடி முயற்சி செய்யும்போது இவ்வளவு ஆலோசனைக் குறைவாய்க்கூட எங்கேனும் நடந்து கொள்ளலாமோ. இச்சமயத்தில் இங்கு நமக்கு அடைக்கலஸ்தானம் கிடைத்திருப்பதே எவ்வளவோ விசேஷம். ஓ இராணி! ஒரு வார்த்தை ஆத்மநாதம் பிரபுவின் செவியில் எட்டிவிட்டால் அதோடு நம் பாடு நடுவீதி நாராயணு என்ருய்விடும். பிறகு நமது கதி என்னுகும்? ஓ! இராணி! தாங்கள் செய்தவேலை..." என்றதே, இராணி அவமானத்தைச் சகிக்க முடியாமல் கண்ணீர் விட்டுக்கொண்டே "அந்தோ! என்னை யின்னும் அவமானப் படுத்த வேண்டாம்" என்ருள்.

டாக்டர்:—"மகாராணி! நான் உம்மை அவமானப் படுத்துகிறவனல்ல. ஆச்சு! இதோ இவனுக்கு ஸ்மரணை வரப்போகிறது. சீக்கிரம் போய்விடு

பயப்படாதே. இந்த விஷயத்தைப் பற்றி நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்றார்.

இராணிமிக்க அவமானத்தோடு போய்விட்டாள்.

வில்வநாதனுக்கு ஸ்மரணை வந்ததே அவன் டாக்டரிடமிருந்து திமிரிக்கொண்டு தன் துயரை யடக்க முடியாமல் கண்ணீர்விட் டழுதான்.

டாக்டர்:—"குழந்தாய்! பிரபுவே! ஏன் அழுகிறீர். உமக்கு அப்படிப்பட்ட துயரம் வந்தகாரணம் என்ன?'' என்றார்.

வில்வநாதன்:—என்ன துயரமா? கடவுளே! என் மனதிலிருக்கிற வேதனை! பயங்கரமான சந்தேகங்கள்.....அந்தோ பொறுக்க முடியவில்லை.

டாக்டர்:—"குழந்தாய்! உன் மனத்துயரை யடக்க முடியவில்லை யென்கிறாய். என்னிடம் கூறக்கூடாதா? நான் உனக்குத் தேறுதல் கூறமாட்டேனா. நான் உன்னை வளர்த்த தந்தையல்லவா. எனக்கு உன்மேலிருக்கு மன்பும் ஒருபோதும் குறையாததல்லவா?

வில்வநாதன்:—"கடவுளே! எனக்கு எவ்வளவோ தேறுதல் வேண்டியதே. ஒரு தேவதூதன் நேரில்வந்து எவ்வளவு நயவஞ்சகமாய்க் கூறினாலும் இந்த இராணி நிரபராதியென்று ஒரு போதும் நம்பவே மாட்டேன். அவளைப் பற்றிய வதந்திகள் யாவும் உண்மையே. ஒன்றுகூடப் பொய்யல்ல. சுத்த அயோக்கியவதி, ஜாலக்காரி, விபசாரி, அந்தோ கொலை பாதகி! அப்படிப் பட்டவளை என் தாயாரிடமும் என் தங்கையிடமும் கொண்டுவந்து விட்டிருக்கிறீர்.'' என்றான்.

டாக்டர்:—'குழந்தாய்! இராணியின் காதல் விஷயமான சங்கதியில், அவள் சிறு வயதினாலும், அவள் சற்றும்

பிரியங் கொள்ளாது வெறுக்கும் புருடனை யவளுக்கு மணம் புரிந்ததாலும், நெறி தவறி நடந்துக்கொண்டாள் என்பதை நான் மறுத்துக் கூறவில்லையே. ஆனால் அவள் கொலை செய்தவள் என்பது அபாண்டம்'' என்றார்.

வில்வநாதன்:—நீர் கூறியதும் உண்மைதான். ஆனல் அமரநாதன் கொலை பெரிய சந்தேகத்தி லிருக்கிறதே. அதன் உண்மை யென்ன?

டாக்டர்:—ஆ! நீ ஏதோ விசேஷ சங்கதிகள் கேள்விப்பட்டிருக்கிறாய். இன்று நீ முன்னடியே உலவப் போயிருந்தாய். நீ திரும்பி வரும்போது மிக்க சோர்வடைந்து வந்தாய். பிறகு உன் அறைக்குப் போய் அங்கேயே யிருந்துவிட்டாய். இன்று உன் நடக்கையே வியப்பானதாக விருக்கிறது.

வில்வநாதன்:—ஆம். நான் மதில் சுவர்மேல் உலவச் சென்றேன். அந்த வாலிபனைச் சந்தித்தேன்.

டாக்டர்:—ஆ! நீ அந்தப் பூபாலனைக் கண்டாய். அவன் என்னென்னமோ உன்னிடம் கூறிவிட் டிருக்கிறான்.

வில்வநாதன்:—ஆம். அவன் என்னிடம் மிக்க பயங்கரமான சங்கதிகளை யெல்லாம் கூறினன்.

டாக்டர்:-குழந்தாய்! அந்தப் பூபாலன் என்மேல் விரோதமுடையவன். நீ மிக்க நீதியான நெறியில் நடப்பவன், நல்ல அறிவும் பொறுமையு முடையவன். என் வாக்குமூலத்தைக் கேட்டறியாமல் அவன் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தானே நீ என் மேல் கெட்ட அபிப்பிராயங் கொண்டு நான் ஏதோ அக்கிரமங்களைச் செய்துவிட்டதாக நம்பிவிடுவாயென்று நான் கருதவில்லை.

வில்வநாதன்:— "ஓ! கடவுளே! அவன் கூறியவற்றில்

நீர் நூற்றில் ஒரு பாகம் செய்திருந்தாலும் இனி உம் சகவாசத்தி லிருப்பது ஒரு விநாடிகூட உதவாது. உமது ஆயுள் முழுமையும் செய்த பாபத்திற்கு மன்னிக்கும்படி கடவுளைப் பிரார்த்திக்கும் ஒரு வேலையையே செய்துகொண் டிருப்பதாயின் ஒரு சமயம் உமக்குத் தேறுதல் கூற நான் பிரியப்படலாகும்.'' என்றான்.

இம்மொழிகளைக் கேட்ட டாக்டர் மனதில் பெருந் திகி லுண்டாய்விட்ட தெனினும், தந்திரமாக அவன் எவ்வளவு தூரம் தெரிந்துகொண் டிருக்கிறானென்பதை யறிவதற்காக சாந்தமாகவும் கேட்போர்க்குப் பரிதாபத்தை யுண்டாக்கக் கூடியவிதமாகவும் அவ்வாலிபனை நோக்கி "களங்கமற்ற மனதையுடைய என் அன்பார்ந்த குழந்தாய்! என்மேல் இன்னின்ன குற்றங்கள் கூறப்படுகின்றன என்பதை யறியாமலே நான் உனக்கென்ன பதில் கூறுவேன். தயவு செய்து பூபாலன் என்னென்ன கூறினான் என்பதை முழுமையுங் கூறு, சற்றும் அஞ்ச வேண்டாம். எனக்கு மனதில் ஒரு பீதியுமில்லை.'' என்றான்.

வில்வநாதன் "ஆம் நான் எல்லாவற்றையும் கூற வேண்டிய தவசியமே. அவன் கூறியயாவும் உண்மையாயின், உம்மைப் போன்ற நயவஞ்சமும், கபடமும், அக்கிரமமும், இரக்கமற்ற நெஞ்சு முடையவன் வேறெவனும் இரான். உமது ஆயுள் முழுமையும் ஆண்டவனைப் பிரார்த்தித்தால் கூட அப்பாதகங்களைத் துடைக்க முடியாது. உமது தமையனும் என் தந்தையின் அரிய நண்பருமாகிய டாக்டர் தேவராஜுப்பிள்ளை, இரணவீர சிங்கம் அரசன், அமரநாதம் இராஜகுமாரன்......'' என்றான்.

டாக்டர் முகம் வெளுத்து மனம் நடுக்கங்கொண்டு

"ஆ! அவர்களைப் பற்றி ...... பற்றி ... எ... என்ன ... என்ன ?" என்றார்.

பூபாலன்:—"அவர்களைப்பற்றி என்னவா! ஏன்! அவர்கள் மூவரும் உன்னால் கொல்லப்பட்டார்கள் என்று கூறப்படுகிறது. கடவுளே!! நான் உம்மைத்தூஷிக்க இப்படிக் கூறவில்லை. நீர் நிரபராதியாயின் தயை செய்து அதை ருசுப்படுத்தும். என்மனம் தீராத வேதனை யடைந் திருக்கிறது. நீர் மட்டும் நிரபரா தியே யென்று கூறினால் என்மன வேதனை யெவ்வள வோ குறைந்து விடும்" என்றான்.

டாக்டர் மனம் இப்போது பெருங் கலக்கத்தில் வந்து விட்டது. வாலிபனுக்கு இன்ன பதில் கூறுவ தென்று விளங்க வில்லை. அவன் துணிகரமான நிலைமையி லிருக்கிறான், இனி பொறுக்கமாட்டா னென்று நன்றாய்த் தெரிகிறது. ஏதாவதொன்று செய்து அவனைச் சாந்தப் படுத்தியே தீரவேண்டும். அவனுக்குத் தீங்குசெய்யவே மிக்க பயமாக விருப்பதோடு கிழவனுக்கு மனமும் வர வில்லை. என்ன செய்கிறது. சீக்கிரம் எந்தவழியிலாவது அவனுக்குப் பொறுமை யுண்டாக்கி வைக்க வேண்டும். பிரபுவுக்கு மட்டும் சங்கதி தெரிந்து விட்டதோ, அந்த நிமிடம் மாளிகையைவிட்டு வெளியில் கட்டாயம் துரத்தி விடுவார். இராணியின் கதி அதோகதியாய் விடும். ஆகை யால் இன்னும் கொஞ்சகாலம் இராணி அங்கு ஒளிந்து கொண்டே யிருக்கவேண்டும். வாலிபனோ ஆசைவார்த் தைகளில் மயங்குகிறவ னல்ல; அவனைப் பயப்படுத்தி னாலோ உடனே மோசமாக முடியும். என்னதான் செய் வதென்று சற்றுநேரம் குழப்பத்தி லிருந்தான். திடீ லென்று ஒரு யோசனை யுதித்தது. மிக்க அன்பான வார்த்தைகளால் பரிதாபத்தோடு வாலிபனை நோக்கி,

"குழந்தாய்! எனக்கொருவரும் திக்கில்லை. நான் நிராதரவான நிலைமையி லிருக்கிறேன். என்மேல் கேட்கும்போதே என் நெஞ்சு நடுங்கும்படியான அபாண்டங்க ளெல்லாம் கூறப்பட் டிருக்கின்றன. ஏககாலத்தில் இவற்றைக் கேட்கவே என் மனதின்மேல் ஒரு மலையைத் தூக்கி வைத்ததுபோ லிருக்கிறது. எனக்கு ஒருயோசனையும் தோன்றவில்லை. ஆனால் நான் நிரபராதியே. இச்சமயம் இவ்வளவே நான் கூறக்கூடும். நான் உன்னைப்புத்திரனாகவே பாவித்து உன்மேல் எவ்வளவோ அன்பு வைத்திருக்கிறே னென்பது உன்மனதிற்கே தெரியும். நீயும் அவ்வாறே யென்மேல் தந்தை யன்பு வைத்திருக்கிறாய். நான் உன்னை யொரு வரம் கேட்டுக் கொள்ளுகிறேன். அதாவது நீ முப்பது நாட்கள் வரையில் இவற்றைப்பற்றி உன்மனதில் ஒரு தீர்மானமும் கொள்ள வேண்டாம். அதுவரைத் தயைசெய்து பொறுத்துக்கொள். முப்பத்தோராவது நாள் நான் நிரபராதி யென்பதைப் பற்றி உனக்குச் சரியான அத்தாட்சி காட்டுவேனென்று நம்பு. இதிற் சற்றும் ஐயங்கொள்ள வேண்டாம். நான் இவ்வளவு வேண்டிக் கொள்ளும் போது நீ சற்று பொறுக்கலாகாதா. அதுவரை உன் பெற்றோர்க்குச் சற்றேனும் சந்தேக முண்டாகுமாறு நடந்து கொள்ளா திருக்கவேண்டும்" என்றார்.

மயூரநாதம் பிரபுவாகிய வில்வநாதன் இயற்கையாகவே இளகிய மனதையுடையவன். அதோடு டாக்டரை வளர்த்த தந்தையாகக் கருதி அவர்மேல் மிக்க அன்பு வைத்திருந்தவன். அவன் கிழவன் கூறிய மிக்க தந்திரமான நயவஞ்சக மொழிகளைக் கேட்டதே,

"ஆகா! கட்டாயம் பொறுத்துக்கொண் டிருக்கிறேன். தங்கள்வாயால் ருசுப்படுத்துவதாய் உறுதிமொழி

கூறியதே என் சந்தேகத்தில் பாதியை யொழித்து விட்டது. நான் என்பெற்றோர் முன்னிலையில் அவர்களுக்குக் கொஞ்சமேனும் அய்யமுண்டாகு மாறு நடந்துகொள்ள மாட்டேன். இராணிக்கு என் நடக்கையால் உண்டான அவமானமே இச்சமயம் போதுமான தண்டனை யாகும். சத்தியாக ஒருமாதம் வரையிலேனும் சற்று நிம்மதியான மனதோ டிருப்பேன். உமது வார்த்தைகளை நம்புகிறேன்'' என்றான்.

டாக்டர் எப்படியோ தன் எண்ணம் நிறைவேறிய தற்கு உள்ளத்தில் சந்தோஷமடைந்து வாலிபனை நோக்கி "குழந்தாய்! நீ எப்போதும் உதாரகுணமும், கருணையும், பெருந்தன்மையு முடையவன் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். கடவுள் உனக்கு ஒரு குறையும் வைக்கமாட்டார். நான் அவசியம் என்மேல் கூறப்பட்ட யாவும் அபாண்டங்களே யென்று உனக்கு நன்றாக விளங்கச் செய்கிறேன்'' என்றான்.

அதன்பிறகு நிஷ்கபடமும் உத்தம குணமுமுடைய வாலிபனும் நயவஞ்சகத் துஷ்டனாகிய தங்கவேலுப் பிள்ளையும் மதில்மே லிருந்து திரும்பி மாளிகைக்குள் பிரவேசித்துத் தங்கள் சயன அறைகளுக்குச் சென்றார்கள்,

* * * * * *

மனிதர்கள் ஒரு சத்காரியத்தில் முயற்சி எடுத்துக் கொள்ளும் போது இடையூறேதேனும் உண்டாகி ஒரு முறை யபஜெயமடையின் மறுபடி மறுபடி ஊக்கத்தோடு முயலவேண்டு மென்பதே அறிவாளிகளின் கருத்தாகும். பெரும்பாலும் நல்லகாரியத்தில் முயற்சி செய்வோர்கள் அவ்வாறு செய்வதில்லை. ஆனால் தீயகாரியத்தில் முயல்வோர் அவ்வாறு செய்வதை யதிகமாகக் காணலாம்.

அதுபோலவே இராணியும் அன்றிரவு முழுமையும் வில்வநாதன் சிந்தனையாகவே யிருந்தாள். அழகில் சிறந்த மங்கையும் இராணியுமான தன் காதலை ஒரு வாலிபப் பிரபு அலட்சியம் செய்து விடுவதெனின், அது அவளுக்கு மிக்க அவமானமாகத் தோன்றியது. ஆயினும் அவள் மனச்சோர் வடையவில்லை. தன் அழகினாலும் இனிய மொழிகளாலும் எவ்வகையாகவாவது அவ் வாலிபனை நாம் மயக்கி நமக்கிணங்கும்படி செய்து கொள்ள வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

மறுநாள் பகல் டாக்டர் மூலமாய் வில்வநாதன் முப்பது நாட்கள் வரை பொறுத்துக்கொள்ள ஒப்பிக் கொண்ட விஷயத்தை யறிந்தாள். அன்று பகல் முழுதும் வில்வநாதனை யவள் தனியே சந்திக்க முடியவில்லை. இவ்வாறே பத்து நாட்கள் கழிந்தன. அதன் பின்பு ஒருநாள் பிரபு அசௌக்கியமாகத் தமது அறையில் சயனித்துக் கொண்டார். சீமாட்டி அவருக்கு உபசாரம் செய்யச் சென்றாள். டாக்டர் அன்று நயனபுரியில் தேவசிங்கனிடமிருந்து வந்த கடிதத்திற்கு பதில் எழுதத் தன்னறைக்குச் சென்றார். குசலாம்பாளும் தன் அறையில் உட்கார்ந்து தையல்வேலை செய்துகொண் டிருந்தாள். ஆகவே இராணியும் வில்வநாதனும் விசாலமான ஒரு முன்னறையில் தனியே யிருக்க நேர்ந்தது.

அச்சமயம் இராணி வில்வநாதனை நோக்கி "பிரபுவே! தங்களுக்கு மனதில் என்மேல் எவ்வளவு வெறுப்பும் கோபமும் இருந்தபோதிலும் இப்போது நான் கூறும் மொழிகளைத் தயவுசெய்து முடிவு வரையில் கேட்டுக் கொள்ள வேண்டுகிறேன்" என்றாள்.

வில்வநாதன்:—"மகாராணி! முன்னே நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளும். இப்போது நான்

தனியே யுங்கள்கூட உட்கார்ந்துகொண் டிருக்கச் சம்மதித்தது தாங்கள் இராணி யென்பதற்கும், எங்கள் வீட்டில் வந்திருக்கும் விருந்தாளி என்பதற்கும் மரியாதை வைத்தே" என்றான்.

இராணி:—" அதற்காகவல்லாவிடின் என்னைத் தனியே விட்டு விட்டு எழுந்துப்போய் விட்டிருப்பீர். ஆகையால் நான் நிரபராதியென்று தெரிந்தால் உயிருள்ள வரையில் எனக்காக யுத்தம் செய்வதாக அன்று கூறியது உண்மையல்லவே ?" என்றாள்.

வில்வநாதன்:—ஆ! தாங்கள் மட்டும் தங்கள் நிரபராதத் தன்மையை நிரூபிக்கப் பேசுவதாயின் நான் மிக்க சந்தோஷ மடைவேன்.

இராணி:—ஆ! இப்படிவந்து உட்காரும். என்மேல் சற்று நம்பகம் வையும். நான் அன்று முட்டாள் தனமாய் நடந்துகொண்டதற்கு என்மேல் கோபம் வைக்கவேண்டாம். நான் பாத்திர முடையவ ளென்று தெரிந்தால் என்மேல் நல்ல அபிப்பிராயம் வையும். இப்போது நான் சாதாரண ஸ்திரீயாக உம்மிடம் பேசுகின்றேன். என்னிடம் ஒரு சிநேகி தனைப்போலிருக்கலாகாதா ?" என்று கூறிக் கொண்டே அவன் அருகில் நகர்ந்து சென்று,

" பிரபுவே! முதலாவது என்மேல் சாட்டப்பட்ட குற்றத்தைப்பற்றிக் கூறுகிறேன். அக்குற்றம் அபாண்டமென்றும் அப்படி யினி யென்மேல் குற்றம் கூறுகிறவர்கள் மதப்பிரஷ்டம் செய்யப்படுவார்களென்றும் ஜகத்குருவே தீர்ப்பளித்திருக்கிறார். அதைப்பற்றி பூரண ருசு விருக்கிறது. டாக்டர் கூறிய தவணைக்குப் பனிரண்டு நாட்கள் கழிந்துவிட்டன. இன்னம் பதினெட்டு நாட்கள் மட்டும் பொறுத்தால் எல்லா விஷயங்களும்

பூரணமாக ருசு செய்யப்படும். அப்போது என்மேல் இத்தகைய சந்தேகங்கொண்டதற்கு தாங்களே மன வருத்தப்படப் போகிறீர்கள்.'' என்றாள்.

வில்வநாதன் அவள் தந்திரமான பொய்களை யெல் லாம் உண்மையென்றே நம்பிக்கொண்டான். அதனால் மனங் கரைந்து "ஆ! அப்படி நேரிட்டால் நான் மிக்க சந்தோஷமடைவேன்" என்றான். இராணி யதன்பின் தந்திரமாய் மிக்க அன்பான வார்த்தைகளைப் பேசிய போது, அவன் சந்தேகமடைந்து சம்பாஷணையை மாற்றி விடக்கருதி, "தங்கள் கணவரிடமிருந்து நல்ல சங்கதியே வந்ததென்று கருதுகிறேன்" என்றான்.

இராணி:—"ஆம். என் கணவர் அங்கு சென்றதும் நகர குருவையும் பலப் பிரபுக்களையும் கண்டு பேசி னார். அனைவரும் எனக்கு உதவிசெய்ய ஆயத்த மாக விருக்கிறார்களாம். என் கணவனுடைய தாயா ராகிய என் அத்தை விக்னபுரியிலிருந்து பெரும் பொருளை நயனபுரிக் கனுப்பியிருக்கிறார்கள். எல் லாம் மிக்க திருப்திகரமாகவே யிருக்கின்றன. நான் பழையபடி என் இராஜ்ஜியத்தைப் பெறுவே னென்று நம்பக் காரணமிருக்கிறது; ஆ நான் மட் டும் மறுபடி இந்நாட்டிற்கு இராணியானால் இப்போ தெனக்கு உதவி செய்யும் என் நண்பர்களை யொரு போதும் மறக்கவேமாட்டேன். தங்கள் தந்தைக் கும் தங்களுக்கும் இன்னும் மேலான அந்தஸ்தை யளிப்பேன். தாங்கள் என் சபைக்குச் சூரியனைகப் பிரகாசிக்கும்படி செய்வேன். தாங்கள் என் சபைக் குப் பிரதானமான அலங்காரமாக விருக்கவேண்டும். நான் தங்களைக் காணமலிருந்தால் உயிர் வாழ்ந்திர முடியாது.'' என்று இவ்வாறு கூறத்தொடங்கியதே

வில்வநாதனுக்குச் சந்தேகமும் திகிலும் உண்டாய் விட்டது.

இராணி "சற்றுப் பொறும். என்மேல் கோபிக்கவேண்டாம். முழுதும் கேட்டால் கடைசியில் என்மேல் இரக்கமும் பரிதாபமுமுண்டாகுமே யன்றி கோபம் வராது. என்று கூறிக்கொண்டே போகையில் வாலிபன் பிரமித்து மரம்போல் ஸ்தம்பித்து மிரண்ட பார்வையோடு பார்த்துக்கொண்டேயிருந்தான். இராணியின் கருத்து அவன் மனதில் பட்டாலும் "ஒருவேளை நாம் தவறுகக் கருதுவதானுல் குற்றமாய் விடுமே" என்றஞ்சினுன். இராணி மிக்க தந்திரமாகப் பேசத்தொடங்கி "ஆ! பிரபுவே! தங்களுக்கொரு தங்கையிருக்கிருள். தங்கள் தங்கையும் நானும் இருவரும் மாதரே. இருவர்க்கும் ஒரே விதமான மனமே ஒரே விதமான உணர்ச்சிகளே. எங்கள் மன உணர்ச்சி கடவுளா லளிக்கப்பட்டதே யன்றி வேறல்ல. இத்தகைய உணர்ச்சி எங்களுக்குண்டானதற்காக எங்கள்மேல் கோபித்துக் கொள்ளலாகாது." என்று இவ்வாறு இரகசியக் கருத்துடைய வார்த்தைகளைக் கூறிக் கொண்டேபோய்க் கடைசியில் "பிரபுவே நான் என் இராஜ பதவி, செல்வம் முதலிய யாவற்றைக் காட்டிலும், இன்னும் என் பிராணனைக் காட்டிலும் அதிகமாக உம்மைக் காதலிக்கிறேன். என்னை யேற்றுக்கொள்ள மறுக்கவேண்டாம்" என்று அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள்.

வில்வநாதன் மனதில் அடக்க முடியாத கோபமும் வெறுப்பும் திகிலும் உண்டாய்விட்டது. அவன் மனம் வெறி பிடித்ததுபோ லாகிவிட்டது. அவன் வெடுக்கென்று தன் கரத்தைப் பிடுங்கிக்கொண்டு "ஓ பைத்தியக்காரி! போ அப்புறம். நீ யாரிடம் இப்படிக் கூறுகிருய்

என்பதை யறியாமலே பேசுகிறாய்'' என்றாள். "இராணி! இல்லை யில்லை. நான் உன் இராணி யென்பதை நினைத்துப் பார். எனக்கு இணங்கியே தீரவேண்டும்'' என்று கூறிக் கொண்டு அவன்மேற் பாய்ந்து அவன் தோளைக் கெட்டி யாய்ப் பற்றிக்கொண்டாள்.

வில்வநாதன் வேதனை சகிக்க முடியாதவன்போல் "அய்யகோ!'' என்றலறி புயத்தை யிழுத்துக்கொண் டான். இராணி யவன் சட்டையைக் கெட்டியாய்ப்பற்றி யிருந்ததால் அது புயத்திலிருந்து கணுக்கை வரையில் கிழிந்துகொண்டது. அதைக்கண்டதே வில்வநாதன் பிராணவேதனை யடைந்தவன்போல் வீறிட்டலறினான். இராணியும் அதேசமயம் அலறிக் கூச்சலிட்டாள். ஏனெனில் அவன் புயத்தைக்கண்டதும் அவன் குஷ்ட வியாதியுடையவன் என்று அறிந்துகொண்டாள். அந்த நாட்டில் அந்த நோய் என்றால் ஜனங்களுக்கு மிக்க பீதி. சொந்தக் குழவியாயினும் சரி, அந்நோயுடையதாயின் அதை வீட்டில் வைத்திருக்க மாட்டார்கள். ஆத்மநாதம் பிரபுவும், பத்மநாயகியின் கணவன் இலட்சுமணனும் தங் கள் பிள்ளைகளை டாக்டர் தங்கவேலுப் பிள்ளையிடம் கொடுத்துவிட்டது இக் காரணத்தாலேயே.

மேற் கண்டபடி இராணியும் வில்வநாதனும் ஒருவர் பின்னொருவராக பயங்கரமான சத்தமிட்ட அதே விநாடி அந்த அறையின் கதவு ஆத்திரத்தோடு படீர் என்று திறக்கப்பட்டதும் மாயசிங்கன் அதாவது சத்தியவீரப் பிரபு அறைக்குள் பாய்ந்து வந்தார்.

54-வது அத்தியாயம்.

இராணியும் சத்திய வீரப்பிரபுவும்—ஆத்மநாதம் பிரபு முதலியவர்கள் சத்திய வீரப்பிரபுவைக் கண்டு பேசல்—தேவசிங்கம் இராஜ குமாரன் ஆத்மநாதம் பிரபுவுக்கு வரைந்த கடிதம்.

பாதி ஸ்மரணையற்று சுவரின்மேல் சாய்ந்த வில்வ நாதன் மாயசிங்கனைக் கண்டதே சட்டென்று கிழிந்த சட்டையால் தன் புயத்தை மூடிக்கொண்டு "ஓ என் அருமையான நண்பரே கொஞ்சம் மன்னியும். இதோ நொடிக்குள் வந்துவிடுகிறேன்" என்று கூறிக் கொண்டே துரிதமாக அறையை விட்டுச் சென்றான். அவன் முகத்தில் தோன்றிய கலவரத்தையும், விகாரத் தையும், திகிலையும் கண்ட மாயசிங்கன் மிக்க வியப்படை ந்து "இதில் ஏதோ விசேஷ மிருக்கிறது. இதைப்பற்றி பின்னால் சாவகாசமாய் அறிந்துகொள்ள வேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டான்.

இராணியோ வில்வநாதன் வியாதியை யறிந்ததே அளவு கடந்த வியப்பும் மனக் குழப்பமும் துயரும் அடைந்து பிரமைகொண்டாள். அதே சமயத்தில் திடீ லென்று சிங்கம்போன்ற மாயசிங்கனைக் கண்டதே கருட னைக்கண்ட நாகம்போல் ஆவிசோர்ந்து அங்கிருந்த சோபாவில் சாய்ந்துவிட்டாள்.

எப்போதும் தன் கொடிய பகைவனிடத்தும் இரக் கங்காட்டும் பெருந்தன்மை வாய்ந்த மாயசிங்கன் இராணி யினருகிற்சென்று "மகாராணி நான் உமக்குக் கெடுதி செய்ய வந்தேனென்று அஞ்சவேண்டாம்" என்றான். இம்மொழிகளைக் கேட்டதே இராணி அளவு மீறிய நம்

பிக்கையும் அதனால் அகங்காரமுங்கொண்டு துள்ளியெழுந்து ஆசனத்திலுட்கார்ந்து,

"ஆ! நீ பகைவனாக வரவில்லையா? அப்படியாயின் என் ஜனங்கள் என்னையே மறுபடி விரும்பி யழைக்கிறார்களோ? நான் மறுபடி இந்நாட்டின் அரசியாக அரசாள்வேனோ, கூறும். அது உண்மையேயென்று கூறினால் உம்மைத் தண்டிப்பதற்குப் பதிலாக உமக்குப் பரிசளிப்பேன்" என்றாள்.

இவ்வாறு இராணி கூறியதற்கு வேறெவனாயிருந்தாலும் தான் இராணிக்கு எவ்வளவு நன்மை செய்யவெண்ணி வந்திருந்தபோதிலும் அதை மறந்து உடனே அவள் செய்திருக்கும் குற்றத்திற்குத் தக்க தண்டனையையவள் அடையும்படிச் செய்துவிட் டிருப்பான். ஆனால் மாயசிங்கனோ இராணியை யுற்று நோக்கி,

"மகாராணியே! என் எண்ணத்தை யறியாமலே ஆத்திரப்பட்டு பேசவேண்டாம். இராஜ பதவியையடைய ஆவலோடு கூறியவை யனைத்தும் சுபாவமே. ஆனால் பின்னால் கூறிய வார்த்தை அகங்காரத்தையே காட்டுகிறது. இராஜ பதவி வெளியில் தோற்றுவதுபோல், உண்மையில் அவ்வளவு பெருமையும், சுகமுமானதல்லவென்றும் சற்று நெறிதவறின் பிராணபத்தை யளிப்பதென்றும் இதுகாறும் உமக்கு அனுபவமாய்த் தெரிந்திருக்கவேண்டும். அதை யுணராது அகங்காரத்தால் அறிவு மயங்கி குற்றவாளிக்கு நிரபராதியைத் தண்டிக்க அதிகாரமும் வல்லமையுமிருப்பதாகக் கருதிப் பேசுகிறீர்" என்றான்.

இராணிக்கு மறுபடி திகில் உண்டாய் விட்டது. "ஒ! அப்படியானால் நீ விரோதியாகவே வந்திருக்கிறாய். ஆயினும் பதியையும் நாட்டையு மிழந்து துக்க சாகரத்

தில் மூழ்கிக்கிடக்கும் ஒரு பெண்பாலை யவமானப் படுத்துவதும் எளனம் செய்வதும் உமக்கு அழகல்ல. அப்படிக்கின்றி நீர் கெடுதிசெய்யும் விரோதியாய் வாராதிருந்தால் எனக்குரிய மரியாதையோடு வந்து பணிந்து வார்த்தையாட வேண்டும்'' என்றாள்.

மாயசிங்கன் வெறுப்பான புன்னகையோடு "மகாராணி! நான் கெடுதி செய்வேனென்று அஞ்ச வேண்டாம் என மறுபடி கூறுகின்றேன். உமது துயரமான நிலைமையைக் கண்டு நான் எளனம் செய்யவெண்ணி வரவில்லை. அல்லது உம்மை இராணியாக வேற்றுக்கொண்டு பணியவும் வரவில்லை. உமக்குச் சில ஏற்பாடுகளைக் கூற வந்தேன். அதற்குச் சம்மதித்தால் நன்மை பெறலாம்.'' என்றான்.

இராணி ஆவலோடு என்ன ஏற்பாடுகள் என்றாள். மாயசிங்கன் ''உமக்குக் கௌரவமான ஒரு சிம்மாதனமளிக்கப்படும், அரசாளச் செல்வம் பொருந்திய ஒரு நாடும் பெருமையுடைய ஜனங்களும் அளிக்கப் படுவார்கள். ஆனால் நாடும் நயனபுரியல்ல, ஜனங்களும் இந்த நாட்டாரல்ல'' என்றான்.

இராணி கலவரமும் வியப்புமடைந்து ''என்ன நீர் கூறுவது ஒரு விடுகதைபோ லிருக்கிறதே'' என்றாள். மாயசிங்கன் "எல்லாம் உண்மையே. விபரம் உமது கணவர் வந்து கூறுவர்'' என்றான். கணவன் என்றதே இராணிக்குத் திகிலும் கலவரமும் உண்டாகிவிட்டது. "என் கணவர்! தேவசிங்க இராஜனா, அவரைப் பற்றியென்ன? எங்கே யவர்?'' என்றாள்.

மாயசிங்கன் :—"அவரைப்பற்றி யொன்றுக்கும் தாங்கள் கவலைப்பட வேண்டாம். அவர் க்ஷேமமாகவே

யிருக்கிறார். ஆனால் என்னிடம் சிறையாக இருக்கிறார்'' என்றான்.

அம்மொழிகளைக் கேட்டதே "உன்னிடமா? சிறையாகவா?'' என்றாள். மாயசிங்கன் நிதானமாகப் பேசுவதற்குள் இராணி மிக்க கலவர மடைந்துவிட்டாள். தன் கணவன் மாயசிங்கனிடம் சிறையாக விருக்கிறான் என்றதைக் கேட்டதே பலவிதச் சந்தேகங்கள் அவள் மனதில் உண்டாகிவிட்டன. மாயசிங்கன் பாதுகாப்பிலிருக்கும் மாளிகைக்குள் பிரவேசித்திருப்பதால் ஆத்மநாதம் பிரபுவே அவனுக்கு உளவாக விருந்து அவன் உள்ளே வரும்படி விட்டிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டாள். ஆகையால் யார் நண்பர் யார் பகைவரென்று அறியக்கூடவில்லை. தன் நிலைமை தப்பமுடியாத ஆபத்தான நிலைமையாக மாறிவிட்டது போலவும், தானும் தன் கணவனும் அடைக்கலம் என்று நம்பப்பட்டவர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு பகைவனிடம் ஒப்புவிக்கப்பட்டது போலும் அவள் மனதிற்பட்டுவிட்டது. ஆகையால் "அய்யோ கடவுளே! என்று வெறி பிடித்தவள் போல் கோவென்று கதறியழத் தொடங்கினாள்.

மாயசிங்கன், மாதரால் இவளுக்குத் தேறுதலை யுண்டாக்கியபின்பே நாம் நிதானமாகவும் சாந்தமாகவும் யாவும் கூறவேண்டும் என்று கருதிக்கொண்டு, தோழிகளை யழைத்து வரும்படிக் கூற வெளியிற் சென்றான். அவன் வாயிற் படியைக் கடந்ததும் எதிரில் சிலர் வருவதைக் கண்டு அறைக்குத் திரும்பினான். அவர்கள் ஆத்மநாதம் பிரபுவின் மாளிகைக் காரியதரிசியால் அழைத்துக் கொண்டு வரப்படுகிறார்கள்.

அவர்கள் அறைக்குள் வந்ததும் மாயசிங்கன் "ஆ! நீங்களும் வந்து சேர்ந்து விட்டீர்களா?" என்றான். அச்சுதன், ஜக்கன், கிருஷ்ணன் மூவரும் தங்கள் தலைவனுக்கு வந்தனமளித்து "பிரபுவே! இப்போதுதான் வருகிறோம்" என்றார்கள்.

அவர்கள் கூட்டத்தில் இராணி தன் கணவனைக் கண்டதே சந்தோஷத்தோடு ஆவென்று ஆலிங்கனம் செய்துகொண்டாள். தேவசிங்கன் மெதுவாய் இராணிக்குச் சில சங்கதிகளைக் கூறத் தொடங்கினான். மாயசிங்கன் அவர்கள் பேசட்டும் என்று எட்டவேயிருந்து மாளிகையாளை நோக்கி "என் வரவைப்பற்றி யுங்கள் எஜமானுக்குத் தெரிவித்தாயா" என்றான். அந்த ஆள் ஆம் என்றான்.

மாயசிங்கன் "நான் வந்ததால் ஒருவருக்கும் எவ்விதக் கெடுதியும் நேராதென்றும், நான் என் கையாளோடு மட்டும் தனியாகவே இங்கு வந்தாலும் ஆயுதந்தரித்த நம்பகமான ஆயிரம் ஈட்டிக்காரர் பின்னால் துரிதமாக வந்துகொண் டிருக்கிறார்கள் என்றும் கூறினையா?" என்றான்.

மாளிகையாள் :—"மகாப்பிரபு! யாவும் அவ்வாறே கூறினேன். ஆனால் தாங்கள் கொடுத்த கடிதத்தைப் பிரபு வாசித்துப் பார்த்தவுடனே, அவர் மிக்க வியப்படைந்தாலும் பூரண திருப்தியும் சந்தோஷமுமடைந்தார். தேகம் சற்று சுகத்தாழ் வடைந்திருந்தாலும் உடனே தங்களைக் காண வருகிறார். என்னைத் தங்கள் கட்டளையின் படி நடந்துகொண் டிருக்க அனுப்பினார்" என்றான்.

மாயசிங்கன், "என்வாலிப ஆள்?" என்றான்.

மாளிகையாள் "பிரபுவே! அவன் கீழே யிருக்கிறான்" என்றான். மாயசிங்கன் "சரி நான் அழைக்கு மட்டும்

அங்கேயே யிருக்கும்படி கூறு. இதோ நிற்கும் என் ஆட்களை யுடனே அழைத்துச் சென்று டாக்டர் தங்க வேலுப்பிள்ளை யிருக்கும் அறைக்குள் விடு" என்று கூறி, தன் ஆட்களை நோக்கி,

"நீங்கள் சென்று அத்துஷ்டப் பூச்சாகிய தங்க வேலுப் பிள்ளையைக் கைதுசெய்து அங்கேயே ஜாக்கிரதையோடு வைத்துக்கொண் டிருங்கள், நான் சீக்கிரம் வருகிறேன். அவனுக்கு ஒரு சங்கதியும் வெளியிடாதீர்கள்" என்று கட்டளையிட்டான். அவர்கள் சென்றதும் இராணியும் அவள் கணவனும் பேசிக்கொண் டிருப்பதைக்கண்டு மாயசிங்கன் தூரத்தில் இருந்த ஒருசோபாவில் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

மாயசிங்கன் இவ்வாறு சிந்தனையி லிருக்கும்போது ஆத்மநாதம் பிரபுவும் வில்வநாதனும் அறைக்குள் வந்தார்கள். ஆத்மநாதம் பிரபுவைக் கண்டதே தேவசிங்கராஜன் எழுந்து எதிர்கொண்டு சென்று "பிரபுவே தங்கள் உதவிக்காக மிக்க வந்தன மளிக்கிறேன்" என்று கூறினர். வில்வநாதன் இதுதான் சமயமென்று துரிதமாய் இராணியினருகில் சென்று "தாங்கள் என் இரகசியத்தை வெளியிடாம லிருக்கவேண்டும். தங்கள் கணவன் வந்திருக்கிறார்" என்றான்.

இராணி அவன் கருத்தை யறிந்து கொண்டு "என் முட்டாள்தனமான செய்கையைப் பற்றி என் கணவரிடம் தாங்கள் கூறும்படியாக நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்" என்றாள். தன் வியாதியைப்பற்றி இராணி யெங்கே வெளியில் கூறிவிடுகிறாளோ வென்று வில்வநாதனுக்கு மிக்க திகிலாக விருந்தது. இப்போது அவன் கலக்கம் நீங்கியது. அவன் தன் அறைக்குச் சென்று வேறு சட்டை யணிந்துகொண்டு வந்தாலும்

அவன் முகம் வெளுத்திருந்தது. ஆனால் அவன் இராணியைவிட்டு அப்புறம் வந்து மாயசிங்கனருகில் நின்றதும் மலர்ந்த முகத்தோடு அவனை நோக்கி,

"ஆ! கடைசியில் சந்தித்தோம்" என்றான்.

மாயசிங்கன் மிக்க ஆவலோடுஅவனை யாலிங்கனம் செய்து கொண்டு "ஆம். உத்தம குணங்களை யுடைய வாலிபனே! கடைசியில் சந்தித்தோம்," என்றான். மாயசிங்கனுக்கு அவன்மேல் தன்னை யறியாமலே ஒரு வித வாஞ்சையுண்டானதால் அவன் கண்களில் நீர் துளித்தது. அதன் பிறகு அவன் பிரபுவை நோக்கி,

"பிரபுவே! பரிசுத்தமான உள்ளமும், சினேகவாஞ்சையும், ஜீவகாருண்யமும், உதார குணமும் பெருந்தன்மையும் நிறைந்த இத்தகைய வாலிபனைப் புத்திரனைப் பெறுவதற்கு எவ்வளவோ புண்ணியம் செய்திருக்க வேண்டும்" என்றான்.

ஆத்மநாதம் பிரபு மாயசிங்கனை நோக்கி "பிரபுவே! என் புத்திரனைப் பற்றி இவ்வளவு உயர்ந்த அபிப்பிராயமும் புத்திர வாஞ்சையும் கொண்டிருப்பதற்காக நான் தங்களுக்கு மிக்க வந்தன மளிக்கிறேன். அவன் தங்களைப் பற்றிப் பேசும்போதெல்லாம் தங்கள் பெருந் தன்மையும் கம்பீரமும் பொருந்திய மெச்சத் தகுந்த குணங்களைப்பற்றி புகழ்ந்து கூறாமலிருப்பதில்லை" என்றியம்பிவிட்டுத் தன் புதல்வனை நோக்கி,

"வில்வநாதம்! இதோ பார் இக்கடிதம்! நீ புகழ்ந்து கூறியதை விட இன்னும் உயர்ந்தனவா யிருக்கின்றன இப்பிரபுவின் குணங்கள் என்பது இக் கடிதத்தால் நன்கு விளங்குகின்றது" என்று தேவசிங்கம் அரசன் தனக்கனுப்பிய கடிதத்தை வாலிபனிடம் கொடுத்தார்.

வில்வநாதன் ஆவலோடதை வாங்கி வாசித்தான். அதில் கீழ்க் கண்டபடி எழுதியிருந்தது:—

"கனம் பொருந்திய ஆத்மநாதம் பிரபு அவர்கட்கு—

இக் கடிதத்தைக் கொண்டு வருபவர் நயனபுரி இராஜ்ஜியத்தின் இராஜப் பிரதிநிதியாகிய மகாகனம் பொருந்திய சத்திய வீரப்பிரபு அவர்களாகும். அவர் அங்கு வந்ததும் இராணியிடம் கலந்து பேசுவார். பிரபுவே! இராஜப் பிரதிநிதியவர்கள் மிக்க கம்பீரம் பொருந்திய உதாரகுணம் வாய்ந்தவர்கள். இவ்வுலக முழுமையுமே எனக் களிப்பதாயினும் அவருக்கு விரோதமாக என் ஒரு விரலைக் கூட நீட்டமாட்டேன். நான் இப்படிக் கூறுவது தங்களுக்கு மிக்க வியப்பை யளிக்கும். எல்லா விபரங்களும் நேரிற் கூறுகிறேன். அவர் தங்கள் மாளிகையில் செய்யும் எத்தகைய காரியத்தையும் தடுக்க நினைக்க வேண்டாம். தங்கள் மாளிகைக்கு அவரையே சொந்தக்காரராக எண்ணி எல்லா விஷயங்களிலும் அவர் பிரியம் போல் செய்ய விடுவதோடு அவருக்கு உதவி செய்யும்படி தங்கள் வேலைக்காரர்களை யெல்லாம் அவர் ஆட்களாக விட்டுவிடுங்கள். நான் அவர் அங்குவந்து சேர்ந்த கொஞ்நேரத்திற்குள் வந்து விடுவேன். அவர் கூட ஒரு பலம் பொருந்திய படை வருகிறது. மேற் கண்டவாறு நடந்து கொண்டால் தங்கள் சிநேக வாஞ்சைக்காக மிக்க நன்றி பாராட்டுவேன்.

இங்ஙனம்:

தங்கள் அன்புள்ள நண்பன்,

தேவசிங்கன்"

வில்வநாதன் இதை வாசித்து முடித்ததும், தேவசிங்கன் பிரபுவை நோக்கி "இனி நான் நயனபுரிக்குச் சென்ற

பிறகு அங்கு இப்பிரபு என்னை எத்தகைய உதாரகுணத்தோடும் இரக்கத்தோடும், பெருந்தன்மையோடும் நடத்தினார் என்ற விபரங்களைப் பற்றிக் கூறவேண்டியதே'' என்றான்.

மாயசிங்கன் :—''பிரபுக்களே! நான் இப்போது இதைவிட்டு மாளிகையின் வேறொரு பாகத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது. அதன் பிறகு நீங்கள் சாவதானமாகப் பேசிக்கொண்டிருக்கலாம். ஆத்மநாதம் பிரபு! நான் தங்கள் மாளிகையில் என் பிரியப்படி நடப்பதற்காக என்னை மன்னிக்கவேண்டும்'' என்றான்.

ஆத்ம :—பிரபுவே ஒரு அவசியமுமில்லை. என் மாளிகையையும் என் ஆட்களையும் தங்களுடையனவாகவே எண்ண வேண்டுகிறேன். இப்போது தாங்கள் மாளிகையின் எப்பாகத்திற்குச் செல்லவேண்டும்?

மாயசிங்கன் :—''நான் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையின் அறைக்குச் செல்ல வேண்டும்'' என்றான்.

இதைக்கேட்டதே இராணிக்குப் பெருந்திகில் உண்டாயிற்று. ஆனால் டாக்டர் ''மாயசிங்கன் என்னைக் கொல்லக் கருதினால், எனக்குத் தெரிந்திருக்கும் ஒரு இரகசியத்தைக் கூறி என் பிராணனைக் காப்பாற்றிக் கொள்வேன்'' என்று கூறியிருப்பது தன் நினைவிற்கு வரவும் சற்று தைரியமடைந்து பேசாமலிருந்தாள். அதேசமயம் வில்வநாதன் மனதில் உண்டான கலக்கத்தைக் கண்ட மாயசிங்கன்,

''வாலிபனே! உன் மனக்கலக்கம் இன்னதெனவறிந்துகொண்டேன். டாக்டர் உன்னை வளர்த்ததால் உனக்கு அவர்மேலுண்டாகியிருக்கும் அன்பால் இப்போது உன் மனதில் வியாகூலம் தோன்றியிருக்கிறது.

உனக்காகவே அவன் செய்திருக்கும் பாதகச்செயல்களுக்குத் தகுந்த தண்டனை யவனுக்கு விதிக்காமல் மன்னிக்கப் போகிறேன்'' என்றான்.

ஆத்மநாதம்பிரபுவுக்கு நடந்த கொலைகளைப் பற்றிய சங்கதி தெரியாததலால் "என்ன! பாதகங்களா?'' என்றார்.

இராணி நடுக்கங்கொண்டு மாயசிங்கனை நோக்கி "பிரபுவே! தாங்கள் டாக்டர் என் கணவனைக் கொன்றதாகக் குற்றம் சாட்டினால் ஜகத்குருவால் நிரபராதியென்று தீர்மானிக்கப்பட்ட என்மேலும் குற்றம் சாட்டுவதாகும்'' என்றாள்.

மாயசிங்கன் :—"அந்த ஒருவிஷயத்தைக் கருதியே தங்கள் மேலும் அக்குற்றத்தைச் சாட்டாமல் நான் விடுகிறேன்'' என்று கூறிவிட்டு ஆத்மநாதம் பிரபுவை நோக்கி,

"டாக்டர் மேல் அதையன்றி வேறு குற்றங்களிருக்கின்றன. விபரம் யாவும் பின்னால் கூறுகிறேன். வில்வநாதம்! டாக்டர் அறையைக் காட்ட நீ என்னோடு கூட வா!'' என்று கூறி அவனை யழைத்துக்கொண்டு சென்றான்.

மாயசிங்கன் இராணிக்குக் கூறியது "இராணியே! உன் கணவனைக் கொன்றவர்களில் நீயும் ஒருத்தியென்று நான் அறிவேன். ஆயினும் ஜகத்குரு உன்னை நிரபராதியென்று கூறியது ஒரு பக்கமிருக்க உன்னால் வீணாக உன் கணவன் மனதிற்கு வேதனையுண்டாக்க எனக்கு விருப்பமில்லாததாலேயே யுன்மேல் குற்றம் சாட்டாது விடுகிறேன்'' என்று கூறியதுபோ லிருந்தது.

55-வது அத்தியாயம்.

மாயசிங்கனும் வில்வநாதனும்—சில தகவல்கள்—மாயசிங்கன் டாக்டர் தங்கவேலுப் பிள்ளையின் அறைக்குச் செல்லல்—தேவசிங்கம் இராஜகுமாரன் நயனபுரியில் நடந்த சம்பவங்களை வெளியிடல்—சத்தியவீரப் பிரபுவைப் பிடித்துக்கொள்ளச் சதியாலோசனை நிகழ்தல்—மிக்க ஆச்சரியமான சம்பவங்கள்—சதிக்காரர் பிடிக்கப்படல்—சத்தியவீரப் பிரபுவின் அதிசயமான பெருந் தன்மை.

அறையை விட்டு வெளிச்சென்றதும் மாயசிங்கன் வில்வநாதனை நோக்கி "வாலிபனே! நான் பூபாலனிடம் கூறியனுப்பிய சங்கதிகளை நீ யுன் பெற்றோர்க் குரைக்கவில்லை யென்று தெரிகிறது'' என்றான்.

வில்வநாதன்:—"எது? இராணியும் டாக்டரும் கொலை செய்தவர்களே என்ற சங்கதிதானே? ஆம் நான் கூறவில்லை. நான் பூபாலனைச் சந்தித்ததை யும் அவன் என்னிடம் ஏதோ சங்கதிகள் கூறினன் என்பதையும் டாக்டர் எப்படியோ அறிந்து கொண்டு தான் நிரபராதியென்று அன்று முதல் முப்பது தினங்களுக்குள் கட்டாயமாய் ருசுப்படுத்துவதாக உறுதி கூறினர்'' என்றான்.

மாயசிங்கன் நகைத்து "ஆ! அவனுடைய தந்திர ஜாலங்களில் அதுவும் ஒன்று. நான் பூபாலனை யனுப்பிய காரணமென்னவெனில், உன்னுடைய களங்கமற்ற உள்ளத்தையும் கம்பீரமான குணங்களையும் அவன் தந்திரமான நயவஞ்சகப் பேச்சுகளால் மயக்கிக் கெடுக்காதபடி தடுப்பதற்காக. அவனுடைய உண்மை நடக்கைகளை

யுனக்கும் உன் மூலமாக உன் பெற்றோர்க்கும் அறிவிக்க வெண்ணியதே யாகும்.

பூபாலன் நயனபுரியை விட்டுப் புறப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் ஜகத்குருவினிட மிருந்து என்னிடம் ஒரு ஆள் ஒரு கடிதம் கொண்டுவந்தான். ஜகத்குரு இராணியைப் பற்றியும் அவள் கணவனைப் பற்றியும் சில ஏற்பாடுகள் என் அபிப்பிராயத்திற்காக அனுப்பியிருந் தார். என் அரசருடைய பிரதிநிதியாக அதை யங்கீ கரிக்க எனக்குச் சம்மதமாகவே யிருந்தது. ஏனெனில் அந்த ஏற்பாடு என் அரசருக்கும் திருப்தியாக விருக்கும்; இந்த இராணியால் என் தாய் நாடாகிய நயனபுரி இராஜ் ஜியத்திற்கு நேரிடக் கூடிய தீங்குகள் ஒன்றும் நேரிடா வண்ணம் தடைப்பட்டுப் போனதாகவும் முடியும். அந்த ஏற்பாடுகள் என்ன வென்பதைப் பற்றி நீ அந்த அறைக் குத் திரும்பிச் சென்றதே தேவசிங்க அரசன் கூறுவார். அதோடு அவர் நயனபுரிக்கு வந்து அங்குள்ளப் பிரபுக் களை என்னோடு சண்டையிடும்படி தூண்டி விட்டதைப் பற்றியும், அவர் எவ்வாறு எனக்குத் தீங்கிழைக்க முயன் றார் என்பதைப் பற்றியும், பிறகு எவ்வாறு சிறையாக்கப் பட்டார் என்பதைப் பற்றியும், யாவும் அவரே விபர மாகக் கூறுவார். வாலிபனே! அவர் என் நடக்கைகளைப் பற்றி புகழ்ந்து கூறினாரல்லவா? நானும் அவர் நடக்கை களால் அவர் களங்க மற்ற உள்ளமும், பெருந்தன்மையு முடையவரென்றும் சுயநலங் கருதாது இராணியின்மேல் உண்மையான அன்பு வைத்திருக்கிறாரென்றும் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு அப்படிப்பட்ட மனிதனிடம் அவன் மனைவியின் கொலைபாதகச் செயலைப் பற்றிக் கூறி அவன் மனதிற்கு நீங்கா வேதனையை யுண்டாக்க என் மனம் பிரியப்படுமோ! ஒரு போது மில்லை. ஆகையால்

அதைப் பற்றி நான் அவனிடம் கூருமல் அதை யடக்கி விடுவதே சரி என்று தீர்மானித்துக் கொண்டேன். இக் காரணங்களால் நீ இராணியின் குற்றத்தைப் பற்றி யுன் பெற்ரோரிடம் கூருமலிருந்தது நல்லதாகவே முடிந்தது. இனி யதைக் கூருமலே விட்டு விடு. இராணியின் மனச் சாட்சி யவளைச்சுடுவதே அவளுக்குப் போதுமான தண் டனையாகும், ” என்ருன்.

வில்வநாதன் “பிரபுவே! தங்கள் உதாரகுணத்தின் பெருமைக்குக் கெடுதியை யுண்டாக்கும் காரியத்தை நான் எங்கேனும் செய்வேனே. ஒரு போதும் செய்ய மாட்டேன். ஆனல் ஒன்று; இராணி இன்னும் நெடு நாட்களுக்கு என் தாயர் தங்கை யிவர்கள்கூட விரதபடி செய்துவிடப் பிரார்த்திக்கிறேன் ” என்ருன்.

மாயசிங்கன்:— “நீ யதற்காகக் கலக்க மடையவேண் டாம். தேவசிங்கன் ஜகத்குருவின் ஏற்பாடுகளுக்குச் சம்மதித்து விட்டான். இப்போது அவனும் இராணி யும் பேசிக்கொண்ட மாதிரியால் இராணியும் அதற் குச் சம்மதித்ததாகவே விளங்குகிறது. ஆகையால் அவர்கள் நாளைக்கே இதைவிட்டுப் புறப்பட்டு விட லாம். இனி இத்துஷ்டனுகிய டாக்டர் தங்கவேலுப் பிள்ளையைப் பற்றி...” என்றதே,

வில்வநாதன் “ஆ! அப்படியாயின் டாக்டர் செய்த குற்றங்கள் உண்மையே...” என்று மிக்க துயரத்தோடு கூறினன். மாயசிங்கன் “குழந்தாய் இப்போது அவற் றைப்பற்றி விபரமாய்க் கூறவேண்டிய அவசரமில்லை. டாக்டர் கொலை பாதகனே. நான் பூபாலன் மூலமாய்த் தெரிவித்த குற்றங்களையெல்லாம் அவன் செய்தது உண் மையே. நான் இங்கு வந்த வேலைகள் முடிந்ததே இரண்டு மூன்று நாட்கள் இங்கேயே உன்னேடு நிம்மதியாய்

இளைப்பாறியிருக்க விரும்புகிறேன். நான் இதைவிட்டுப் புறப்படும்போது டாக்டரையும் என் கூடவே யழைத்துக்கொண்டுபோய் ஒரு பெரிய மடத்தில் விட்டுவிடப் போகிறேன். அவன் ஆயுள் பரியந்தம் அங்கேயே கடவுளைத் துதித்துக்கொண்டு காலத்தைக் கழிக்கவேண்டும்" என்ருன்.

இவர்கள் பேச்சு முடியும் வேளை டாக்டர் இருக்கும் அறையின் எதிரில் வந்துவிட்டார்கள். வில்வநாதன் மௌனமாகவே கையால் அந்த அறையைச் சுட்டிக் காட்டிவிட்டு அங்கிருந்து உடனே திரும்பிவிட்டான். மாயசிங்கன் அச்சுதன் முதலிய மூவரும் டாக்டரைக் காவலில் வைத்துக்கொண்டிருக்கும் அந்த அறைக்குள் நுழைந்தான். இப்போது நாம் மாயசிங்கனை யங்கேயே விட்டுவிட்டு வில்வநாதனைப் பின்பற்றிச் செல்வோம்.

இராணி பெருந் துக்கத்திலிருந்தவள் தன் கணவன் வந்ததும் சற்று தேறுதலடைந்தாள். பிறகு அவன் கூறிய ஏற்பாடுகளையெல்லாம் கேட்டதும் தானும் அவற்றிற்குச் சம்மதித்து, கலக்கமடைந்திருந்த தன் மனதிற்கு நிம்மதி யளிக்கவெண்ணி அங்கிருந்து புறப்பட்டுத் தன் அறைக்குச் சென்ருள். ஆத்மநாதம் பிரபு அசௌக்கியமா யிருப்பதால் ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார். தேவசிங்கன் அவர் அருகில் உட்கார்ந்து கொண்டு தன் சரித்திரத்தைக் கூறுவதற்காக ஆவலோடு வில்வநாதன் வரவிற்கு எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். ஆகையால் மாயசிங்கனை டாக்டர் அறைக்குள் செல்லவிட்டுத் திரும்பிய அவ்வாலிபன் அறைக்குள் வந்ததும் தேவசிங்கம் அரசன் கீழ்க்கண்டபடி கூறத் தொடங்கினன்:—

"இன்று சரியாகப் பன்னிரண்டு தினங்களாயின நான் இங்கிருந்து நயனபுரிக்குப் புறப்பட்டு. இரவு முழுவதும் நடந்து காலையில் வழியோரத்திலிருந்த ஒரு ஹோட்டலில் இறங்கி ஆகார மருந்திக் குதிரைக்கும் தீனி வைத்துச் சற்றுநேரம் இளைப்பாறியபின் பிரயாணத்தைத் தொடங்கினேன். சற்று நேரத்திற்குள் பாதையில் சென்றுகொண் டிருந்த ஒரு வாலிபனைச் சந்தித்தேன். அவன் அழகிய வாலிபனே. சற்று நாணயமான உடையணிந்துகொண் டிருந்தான். ஆனால் அவன் சிரசில் மட்டும் தொப்பியில்லை. களைப்படைந்திருப்பவனாகத் தோன்றிய அவன் தன்னையும் என் குதிரையின்மேல் பின்னால் உட்கார்ந்து வரும்படி உதவி செய்யவேண்டுமென்றும், இன்னும் மூன்றும் மைல் தூரத்திற்குள்ளாகவே ஒரு கிராமம் இருப்பதாகவும் தான் அங்கிறங்கி ஒரு குதிரை வாடகைக்கு வாங்கிக்கொள்வதாகவும் கூறினான். நான் அவ்வாறே யுதவி செய்தேன். அவன் கூறியபடியே வழியில் கிராமம் இருந்தது. அவ்வாலிபனிடம் போதுமான பணம் இருந்தது. அவன் ஒரு குதிரை வாங்கிக்கொண்டான். அவன் நமக்குத் தகுதியான உதவி யாவானு வென்றறிவதற்காக அவன் யார் எங்கிருப்பது என்று வினவினேன். ஆனால் அவன் அதற்குச் சரியான விடை யளிக்காததால் நான் அவனை விட்டுப் பிரிந்துவிட்டேன். அவன் சாலை வழியே சென்றான். நான் குறுக்கு வழிகளில் நுழைந்து நயனபுரி சேர்ந்ததும், நேரே நகர குருவின் மனைக்குச்சென்று அவரைக்கண்டேன். அவர் அங்கநாட்டரசனுக்குக் கீழ்ப் படிந்து நடப்பதாக ஒப்பிக் கொண்டிருந்தாலும் என்னைப் பிரியத்தோடேயே நல்வர வேற்றுக்கொண்டார். அவரோடு சற்றுநேரம் சம்பாஷிப்பதற்குள் அவர் இரா

ணிக்கு உதவிசெய்ய ஆவலுடையவராகவே இருக்கிறு ரென்று தெரிந்துகொண்டேன். பிறகு அங்கிருந்து பிரதமகியாயாதிபதியையும், மற்ற பிரபுக்களையும் போய்க் கண்டேன். டாக்டர் கூறியபடி அவர்களனைவரும் அங்க நாட்டரசனுக்கு விரோதிகளாகவே யிருந்தார்கள். வந்த தினமே அவ்வளவு ஜெயம் அடைந்ததைப்பற்றி சந் தோஷமடைந்து நான் தங்க உத்தேசித்த ஒரு வீட்டை நோக்கி நடந்தேன். விக்னபுரியிலிருந்து நான், இராணி, டாக்டர், மூவரும் இரகசியமாகப் புறப்பட்ட தினமே, என் தாயார் ஒரு நம்பகமான ஆள் வசமாகப் போது மான பணம் நயனபுரிக்கு அனுப்புவதாகக் கூறியிருந் தார்கள். நான் தங்க உத்தேசித்த விடம் அந்த ஆட் காரனுடைய சுற்றத்தாரின் வீடு. நான் நகரத்திற்குச் சென்ற அதே தினம் காலையில் தான் அவனும் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டுபேசிப் பணத்தைப் பெற்றுக்கொண்ட பின் நானும் அதே வீட்டில் ஒரு அறையில் தங்கி யிருந்தேன்.

மறுநாள் பகலும்போய் அப் பிரபுக்களையெல்லாம் பார்த்துப் பேசிவிட்டு மாலை சுமார் ஆறுமணிக்கு என் வாசஸ்தலத்திற்குச் சென்றேன். அங்கு நகர குருவினிட மிருந்து எனக்கொரு கடிதம் வந்திருந்தது. நான் ஆல சியம் செய்யாமல் உடனே வரவேண்டுமென்று அதில் எழுதியிருந்ததால் அவ்வாறே சென்றேன். அப்போது அவர் தாம் ஒரு ஆலோசனை செய்திருப்பதாகவும் அதன் படி நடந்தால் நமது காரியம் கட்டாயம் சுலபமாகவே கை கூடிவிடுமென்றும் கூறினர். அவர் கூறிய ஆலோ சனை பின் வருமாறு:—

“பிரதி வருடமும் நடப்பதுபோல் இவ்வருடமும் பிரதானக் கோயிலில் பெரிய பிரார்த்தனை நடக்கிறது.

இரவு சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு இராஜனுக்குப் பதிலாய் இராஜப் பிரதிநிதியாகிய சத்திய வீரப்பிரபு கோயிலுக்கு வருவான். அவனைப் பிடித்துக்கொண்டுபோய் ஒரு கப்பலிலேற்றி ஒரு தூரதேசத்தின் கரையில் விட்டுவிட வேண்டியது. அதன் பின் "இராணி கல்லூர் மாகாணத்திலிருந்து திரண்ட சேனையைச் சேர்த்துக்கொண்டு நகர வாயிலை நெருங்கி வந்துவிட்டாள். தேவசிங்கம் அரசர் முன்னமே நகரத்திற்குள் வந்துவிட்டார். பிரபுக்களனைவரும் அவருக்கும் இராணிக்கும் உதவியாய் இருக்கிறார்கள். இந்த உண்மைகளை யறிந்த இராஜப் பிரதிநிதியாகிய சத்திய வீரப்பிரபு ஓடிப் போய்விட்டார்." என்று பிரஸ்தாபப்படுத்திவிட்டால் அங்க நாட்டுச்சேனை ஆவிசோர்ந்துவிடும். நம் நகர வாசிகள் உற்சாகமும் தைரியமுமடைந்து உடனே கிளம்பிவிடுவர்கள். பிறகு சுலபமாக நமது காரியம் ஜெய மடைந்துவிடும். இரண்டாயிரம் பேர் இதற்காகச் சேகரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு கப்பலும் ஆயத்தமாக விருக்கிறது. சகலமும் திருப்திகரமாக விருக்கின்றன. ஆட்களெல்லாம் பல விடங்களில் பிரிந்திருக்கிறார்கள். சரியாய்ப் பன்னிரண்டு மணிக்கு யாவரும் கோயிலின் உள்ளிலும் வெளியிலும் ஆயத்தமாக விருப்பார்கள்" என்று கூறினார்.

நான் சற்றுநேரம் சிந்தித்துப் பார்த்தேன். சுலபமாய் யாவும் கைகூடிவிடு மென்று என் மனதிற்குப் பட்டது. ஆகையால் ஒப்புக்கொண்டேன். பன்னிரண்டு மணிக்கு முன்பே நான் கோயிலுக்குச் சென்றேன். நான் ஒரு குருபோல் உடையணிந்து என் உடையின் கீழ் ஒரு இடைவாளும் இரண்டு குத்தீட்டிகளும் வைத்துக்கொண்டிருந்தேன். சிரசில் குருமார் அணியும் தொப்பியின் கீழ் தலைக்கவசம் அணிந்திருந்தேன். கோயிலுக்குள்

பலி பீடத்தருகில் அங்கநாட்டு யுத்தவீரர்களில் சிலர் காவலிருந்ததால் நான் கூடியவரையில் அருகில் சென்று நின்றேன். அங்கு வந்திருந்த ஜனக்கூட்டத்தில் சுமார் முந்நூறுபேர் ஒரே விதமான உடை யணிந்துகொண்டு அங்குமிங்குமாய்க் கலந்திருந்தார்கள். உண்மையான இரகசியத்தை யறியாதவர்களுக்கு அவர்களெல்லாம் ஒரே கூட்டத்தாரென்று தெரியாது.

சற்று நேரத்திற்குள் இராஜப் பிரதிநிதி தன் பணியாட்களோடு கோயிலுக்குள் பிரவேசித்தார். அவரோடு கூட வேறு காவல் வீரர் ஒருவரும் வரவில்லை. சாதாரண பாமர ஜனங்களே கோயிலிலும் வெளியிலும் நிறைந்திருந்தார்கள். நமதுகாரியம் மிக்க சுலபமாகவே கைகூடிவிடுமென்று சந்தோஷ மடைந்தேன். பிரார்த்தனை முடியும் சமயம் அந்த ஆட்களெல்லாம் உடைகளால் ஒருவரை யொருவர் உணர்ந்து சமிக்கை செய்துகொண்டு பிரதானமான வாயிற்படியருகிற் சென்று குழுமினர்கள். வெளியில் ஆங்காங்கு மறைந்திருந்தவர்கள் வீதியில் கூட்டமாய் வேடிக்கை பார்த்துக்கொண் டிருக்கும் ஜனங்களருகில் வந்து வாயிற்படிக்கெதிரில் கூடினர்கள். நான் வாயிற்படியருகில் போய் நின்று சமயம் வரும்போது என்குரு உடையைக் களைந் தெறிந்துவிட்டு அங்கு குழுமியிருந்த வீரர்களை நடத்த ஆயத்தமா யிருந்தேன்.

கடைசியில் பிரார்த்தனை முடிந்து விட்டது. இராஜப் பிரதிநிதி அங்கிருந்து வாயிற்படியை நோக்கி மெதுவாக நடந்து வந்தார். அப்போது அவர் கூடப் பணியாட்கள் மட்டுமே வந்தார்கள். எங்கள் ஆட்கள் ஒருவருக்கொருவர் சமிக்கை செய்துகொண்டார்கள். ஆயிற்று இன்னம் இரண்டு நிமிடங்களில் இராஜப் பிரதிநிதி சிறையாக்கப் படப் போகிறார் என்று சந்தோஷமடைந்தேன். நான்

நின்ற விடத்தில் இரண்டு பலாட்டியர்கள் நின்று கொண்டிருந்தார்கள். உடையால் அவர்கள் எங்கள் ஆட்கள் என்று தெரிந்துகொண்டேன். கடைசியில் சமயம் வந்து விட்டது.

நான் சட்டென்று என்மேல் அங்கியைக் கழிற்றி யெறிய ஆரம்பித்தேன். அதேவிநாடி நான் எங்கள் ஆட்கள் என்று நம்பிய, என்பக்கத்திலிருந்த இருவரும் ஒரு பாய்ச்சலாக என்மேல் பாய்ந்து என் ஆயுதங்களைப் பிடிங்கிக்கொண்டு கயிற்றால் என் கரங்களைக்கட்டி என்னைப் பிடித்துக் கொண்டார்கள். அதே காலத்தில் கோயிலுக்குள் வந்திருந்த சாதாரண ஜனங்கள்போ லிருந்தவர் களெல்லாம் புலிகள்போல் உடையணிந்த எங்கள் ஆட்கள்மேல் விழுந்து ஒருவரைக்கூட விடமால் சிறையாக்கிக்கொண்டார்கள்.

அதே சமயம் வீதியிலும் பெருங் குழப்பமாய் விட்டது. அங்கும் வேடிக்கை பார்ப்பவர்கள் போல் கூடியிருந்த ஜனங்கள் உடையணிந்திருந்த எங்கள் ஆட்களைத் தந்திரமாய்ச் சூழ்ந்துகொண் டிருந்து சமயம் வந்ததே அவர்க ளனைவரையும் பிடித்துக் கொண்டார்கள். ஒருவருக்காவது ஆயுதம் எடுக்கவே அவகாசம் கொடுக்கப் படவில்லை. நான் இதைக் கூறச் சில நிமிடங்கள் சென்றனவே யன்றி, இந்த ஆச்சரியமான வேலை ஒரு நிமிடத்தில் முடிந்து விட்டது. ஜெயமடையப் போகிறோம் என்று முழுநம்பிக்கையோ டிருந்த என் மனம் அப்போது எவ்வாறிருந்திருக்கு மென்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாகும். ஆச்சரியமும், கலவரமும், பெருஞ் சந்தேகங்களும், பிராணபயமும், என்னைப் பைத்தியங் கொண்டவன் போல் ஆக்கிவிட்டன. என்னை எங்கு கொண்டு போகிறார்களென்பது கூட எனக்குத் தெரிய

186495
சென்னை-600 008

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் இயற்றியது

கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அநேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேணடிய சகல புததிமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—0

இரத்தின்புரி இரகசியம்.

ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணர வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன இனிமையும் அருமையும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவேண்டுவதில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமாயிருக்கின்றனவென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதராஸ்.

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆம் ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

இரத்தினபுரி இரகசியம்	ரூ.	அ.	தினகரசுந்தரி	ரூபா 1	0
2-பாகமும் ...	4	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
பவளத்தீவு 1-ம் பாகம் ...	1	6	பத்மாஸனி ...	0	14
கற்கோட்டை ...	2	0	வீரநாதன் ...	0	12
மின்சார மாயவன் ...	1	8	குணசுந்தரன் ...	0	12
தேவசுந்தரி ...	1	4	மஞ்சள் அறையின் மர்மம்	1	8
கனகபூஷணம் 2-பாகமும் ...	3	8	கமலசேகரன் ...	1	12
சுவர்ணாம்பாள் ...	0	12	பூங்கோதை ...	0	10
ஆனந்தஸிங் ...	2	0	இந்திராபாய் ...	2	8
மதனபூஷணம் ...	1	0	அமராவதி 2 பாகமும்	4	0
ஸ்ரீ. ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள்	1	12	சகோதரவாஞ்சை	0	6
			ஹை ஸ்கூல் பதிப்பு ...	0	7

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.